உதயசூரியன்

Uthayasooriyan

உதய சூரியன்

கதிர் : 02, 03 | ஏப்ரல், மே 2007 | விலை : 10.00

இனப்பிரச்சினை தீர்வுக்கு துணிச்சலான நடவடிக்கை வேண்டும்

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் 01.05.2007 அன்று மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களுக்கு எழுதிய கடிதம்

தங்களுக்கு உரிய மதிப்புத் தந்து, தாங்கள் ஜனாதிபதியாக கடமையாற்றும் காலத்தில் இனப்பிரச்சனைக்கு சிறந்ததொரு தீர்வு காணமுடியும் என்று இன்றும் நம்பிக்கை வைத்துக் கொண்டு, தாங்கள் தலைமை தாங்கும் கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டம் எமக்கு ஏற்புடையதல்ல என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தீர்வு தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்றதாக இல்லாமையாலும் ஏற்கனவே தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் சாசனத்தின் 13வது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை கூட அண்மிக்கவில்லை என்பதாலுமே மிக்க தயக்கத்துடன் இப் பிரேரனையை நிராகரிக்கின்றேன்.

நமது நாட்டின் இனப்பிரச்சனையை ஓர் தமிழனாக இருந்து பாராது நாட்டையும் அந்நாட்டு மக்களையும் நேசிக்கின்ற, தேசப்பற்றுடைய ஒரு பிரஜையாக இதை நோக்குகின்றேன். இனப்பிரச்சனையின் வரலாறு அறிந்தவன் என்ற காரணத்தினாலேயே நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணையை ஏற்கமுடியவில்லை என்பதை தயவு செய்து நம்புங்கள். பல்வேறு அரசுகளாலும், பதவி வகித்த தலைவர்களாலும் பல்வேறு சந்தர்ப்

பங்களில் எடுத்த முயற்சிகள் பற்றியும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் பயங்கரவாதத்தினால் அடைந்த பல்வேறு நஷ்டங்களையும் உயிர்ச் சேதங்களையும் அழிக்கப்பட்ட அரச தனியார் சொத்துக்களின் பெறுமதி இந் நாட்டைக் கட்டியெழுப்பவும் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் கௌரவமாக வாழக்கூடிய வகையில் உணவு, உடை, இருப்பிடம் நாட்டின் முன்னேற்றத்துக்குரிய உட்கட்டமைப்பு அத்தனைக்கும் போதுமானதாகும்.

பல்வேறு சமூகங்களின் இழப்புக்களும், அவர்கள் அனுபவித்த துன்பங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருந்தாலும் பல்லாயிரக்கணக்கான சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டும், பல்லாயிரக் கணக்கானோர் விதவைகளாக்கப்பட்டும், அனாதைகள் ஆக்கப்பட்டும் மேலும் பல்லாயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகவும், செவிப்புலனையும், பார்வையையும் இழந்துள்ளனர். வீதிகள், பேரூந்துகள், கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் போன்ற பொது இடங்களில் பல சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். புகையிரதம், பேரூந்து, பொது இடங்கள் ஆகியவற்றில் வைக்கப்பட்ட குண்டுவெடிப்பில் பலர் உயிரிழந்துள்ளனர். தினமும் ஏதோவொரு இடத்தில் நடைபெறுகின்ற கிளேமோர், கண்ணிவெடி, கைக்குண்டுத் தாக்குதல்களில் பல படையினர் கொல்லப்படுவதோடு தமிழ் அப்பாவி ஆண், பெண், பிள்ளைகளும் கொல்லப்படுகின்றனர். ஏனைய இழப்புக்கள் தவிர்ந்து கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளினால் பெறுமதிமிக்க 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் பறிபோயின. பயங்கரவாதி களின் குண்டுக்கும், துவக்குச் சூட்டுக்கும் என் குடும்பத்திலேயே அறுவரை இழந்துள்ளேன்.

புனிதமான இந்த வெசாக் காலத்தில் நீங்கள் பௌத்த மத கோட்பாடுகளை

தொடர்ச்சி 5ம் பக்கம்

தமிழ்நாடு தலைவர்களுக்கும் மக்களுக்கும் ஓர் பகிரங்க வேண்டுகோள்

விடுதலைப் புலிகளின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள கிளிநொச்சி தொகுதி உட்பட நான்கு தடவைகள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று 17 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்த 50 ஆண்டுகளுக்கு மேல் அரசியலில் ஈடுபாடுள்ள ஒரு மூத்த தமிழ் இலங்கை பிரஜை ஒருவரினால் இவ் வேண்டுகோள் விடப்படுகிறது. விடுதலைப் புலிகளால் அடிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் வடகிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களை மீட்பதற்காக தமிழ்நாட்டு மக்களும் தலைவர்களும் அரசியல் வேறுபாடற்ற விசுவாசமான ஒத்துழைப்பை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

20 மைல்கள் கடலால் பிரிக்கப்பட்டு இலங்கையின் வடகிழக்கு பகுதியில் வாழுகின்ற தம் இனத்தையொத்த தமிழ், முஸ்லீம் மக்களில் தமிழ் நாட்டில் வாழும் அதே இனத்தை சேர்ந்த 6 கோடி மக்கள் அக்கறை படுவதில் நியாயம் உண்டு. ஆகவேதான் இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாக கவனமாகவும், அக்கறையுடனும் செயல்படுவதோடு, அரசியல் தலைவர்களின் உணர்ச்சிமிக்க பேச்சுக்களால் தூண்டப்பட்டு மக்கள் செயல்படக் கூடாது. அத்தகைய பேச்சுக்கள் எதிர்பார்ப்புக்கு மாறுபட்ட நிலைமையை நாட்டில் உருவாக்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

பல்வேறு காரணங்களுக்காக இலங்கையும் இந்தியாவும் முரண்படக் கூடாது. இது பல ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்த மகாத்மாகாந்தி அவர்களின் கூற்றாகும். இலங்கையும் இந்தியாவும் குறிப்பாக தமிழ்நாடும் ஒருவர்மீது ஒருவர் பரஸ்பர உறவும், புரிந்துணர்வும், நம்பிக்கையும் கொண்டிருக்க வேண்டும். ஆகவே இரு தரப்பு தலைவர்களும் தமது பேச்சுக்கள் மற்றும் செயல்கள் மூலம் மக்கள் மத்தியில் கசப்புணர்வை ஏற்படுத்திவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே சிங்களவர்களும், தமிழ்நாட்டுத் தமிழர்களும் உறவாடுவதற்கு தடையாக சிலர் திட்டமிட்டு செயல்படுவதோடு இரு சாராருக்கும் இடையில் கசப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர். தமிழ் நாடு இலங்கைப் பிரச்சினையை சரியாக விளங்கிக் கொள்ளுமாயின் தப்பான அபிப்பிராயங்கள் நீக்கப்பட்டு இனப்பிரச்சினை தீர்ப்பதற்கு உதவக்கூடிய நிலமை உருவாகும்.

நாட்டுப் பிரிவினை பற்றி தமிழ்நாட்டில் பேசுவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலானதாகும். எனவே, அதனை தவிர்த்து சமஷ்டி ஆட்சி முறையிலோ அன்றி இந்திய ஆட்சி முறையையொத்த தீர்வைப் பற்றியோ பேசுவதே இச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும். இலங்கை தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் இந்தியாவின் தேசிய நலன்களுக்கும் பங்கம் ஏற்படாத வகையில் தமிழ்நாடு ஒரு நிலைப்பாட்டை எடுத்தல்

தொடர்ச்சி 6 ம் பக்கம்

வாசகர்களுடன் ஒருசில நிமிடங்கள்..

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்கள் எழுதும் தொடர்

தந்தை செல்வா அவர்கள் இலங்கை அரசுடன் செய்து கொண்ட அத்தனை ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகளும் பயனற்று போகவே 15-05-1972 ல் அனைத்துத் தமிழர்களையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்து அதன் தலைவரானார். அப்போது நான் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன். தந்தை செல்வாவின் அகிம்சை கொள்கையை ஏற்று இணைந்த போது தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் நான் மட்டுமே. எந்தவித வேறுபாடும் இன்றி அனைவரும் இணைந்த போதும் தந்தை செல்வா, அமரர் சிவசிதம்பரம், செயலாளர் நாயகமாக அமரர் அ.அமிர்தலிங்கம் ஏனைய தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தொண்டர்கள் அனைவருடனும் தமிழ் காங்கிரஸ் சார்பில் நானும் எமது கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் இணைந்து செயற்பட்டதை அமரர் அமிர்தலிங்கம் அவர்களே வியந்து பாராட்டினார். வடக்கு கிழக்கின் தமிழ்க் கிராமங்கள் தோறும் சென்று கட்சியின் கூட்டங்கள் கலந்துரையாடல்களை நடாத்தினோம். அப்போது அனைவரும் அனுபவித்த கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு கால கட்டத்தில் அமரர் சிவசிதம்பரம் அவர்கள் உடல்நலக் குறைவால் கூட்டங்களுக்கு சமூகமளிக்க முடியாமல் போயிருந்தது. அவ் வேளையில் வவுனியா சிவசிதம்பரம் அவர்கள் சில முரண்பாடுகள் காரணமாக சிறிது காலம் எமது கூட்டங்களுக்கு வருகை தருவதில்லை. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான நான் மட்டுமே கூட்டங்களில் கலந்து கொள்வேன், அதனால் தான்

தொடர்ச்சி 2ம் பக்கம்

த.வி.கூ., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டாக அறிக்கை

பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் முன்மொழிவுகளை ஆரம்ப ஆலோசனைகளாகக் கொண்டு இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் கலந்துரையாடல்கள் முன்னெடுத்துச் செல்வது பொருத்தமானதாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பல்வேறு கட்சிகளும் முன்வைத்த முன்மொழிவுகள், யோசனைகளை கூடி ஆராய்ந்தோம். சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண அவர்களுடைய முன்மொழிவுகளை ஆரம்ப ஆலோசனைகளாகக் கொண்டு தீர்வை கண்டறியும் கலந்துரையாடல்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவது பொருத்தமானதெனக் கருதுகின்றோம்.

கடந்த கால அரசுகளால் ஏற்படுத்தப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவை தோல்வியடைந்ததற்கு எதிர்க்கட்சிகளின் உடன்பாடின்மையும் காரணம்.

ஆகவே இனப்பிரச்சினை தீர்விற்கு அரசாங்கம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமானதென்றும், அதேபோன்று இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் அரசுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

அனுபவ ரீதியாக கடந்த கால சர்வகட்சி மாநாடுகள் காலத்தை இழுத்தடிக்கப் பயன்படுத்தப்பட்டமை வெளிப்படையான உண்மை. எனவே, விரக்தியடைந்து தீர்வை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு, கால வரையறைக்குள் ஒரு அமைதித் தீர்வைக் கொண்டுவரக்கூடிய திட்டத்தை சர்வகட்சி பிரதிநிதிகள்குழு முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

எங்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள், யோசனைகளையும் கவனத்திலெடுத்து தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய, ஓர் நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வை இச் சர்வகட்சிக்குழு முன்வைக்கும் என நம்புகின்றோம்.

வீ.ஆனந்தசங்கரி தலைவர் த.வி.கூ	தி.ஸ்ரீதரன் பொதுச் செயலாளர் ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா)	த.சித்தார்த்தன தலைவர் புளொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வாவின் கனவுகளை நனவாக்குவோம்

உதயசூரியன்
Uthayasooryan
E-mail: uthayasooriyan_sl@yahoo.com Tel : 0602135912

எமது சிந்தனையில்

தமிழ் மக்களின் பிரச்சனைகள் ஆரம்பித்து 50 வருடங்களுக்கும் மேலாகிவிட்ட நிலையில் இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த இரண்டு பெரிய தேசிய கட்சிகளும் இதுவரை உருப்படியான தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவில்லை.

ஆரம்பத்தில் சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு போன்ற அகிம்சை ரீதியிலான போராட்டமாக இருந்தாலும் சரி அதன் பின்பு இன்று வரை தொடரும் ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி போராட்டங்களை எவ்வாறு நசுக்கலாம் என்ற ஒரே ஒரு குறிக்கோளுடன்தான் அரசுகள் செயற்படுகின்றனவே தவிர போராட்டத்திற்கான மூல காரணத்தினை தெரிந்திருந்தும் அதனை தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எதனையும் எடுக்வும் இல்லை. அதற்கான விருப்பமும் இருந்ததில்லை. இதுதான் யதார்த்தமாகும்.

தந்தை செல்வா கூறியது போல் தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுவதை தவிர வேறு எதனையும் சொல்வதற்கில்லை. காரணம் அரசுகள்தான் அவ்வாறு செயற்பட்டன என்றால் எமது மக்களின் பிரச்சனைகளுக்கு ஆயுதப் போராட்டமே சிறந்தது என இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தினை ஆரம்பித்தார்கள். விளைவு ஏனைய இயக்கங்களை எல்லாம் அழித்தொழித்து தாங்கள்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று விடுதலைப் புலிகள் செயற்படத் தொடங்கினர். அதனால் எமது இளைஞர்கள் எம்மவர்களாலேயே கொலை செய்யப்பட்டனர். அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், மாற்று இயக்க உறுப்பினர்கள் என்று தமிழர்கள் இன்றுவரை கொல்லப்பட்டும் கடத்தப்பட்டும் வருகிறார்கள். இதற்கெல்லாம் யார் காரணம் என்று நதிமூலம், ரிசிமூலம் பாராமல் இனியாவது நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

நாளொன்றுக்கு ஐந்து தமிழர்கள் வீதம் கொல்லப்படுகிறார்கள். இந்த நிலை நீடித்தால் எமது இனம் ஒரு காலத்தில் இல்லாமலேயே போய்விடும். எனவே இனியும் தாமதியாது அனைவரும் யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட்டு மீதமுள்ள தமிழர்களையாவது காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சகல தரப்பினருக்கும் உண்டு. நான் பெரிது, நீ பெரிது என எண்ணாமல் நாடும் நமது மக்களும் பெரிது என்று எண்ணி செயற்படுவோமேயானால் விரைவில் எமது மக்களுக் விடிவு நிச்சயம்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வு என்று ஒரு சாராரும் சமஷ்டி முறையிலான தீர்வு என மற்றொரு சாராரும் ஒற்றையாட்சியேதான் தீர்வு என ஒருசாராரும் கூறியே நமது பிரச்சினையை இழுத்தடித்து விட்டனர். எல்லா தரப்பினரும் ஒன்றாக அமர்ந்து இதய சுத்தியுடன் பேசினால் ஒரே மாதத்தில் தீர்வுத் திட்டத்தை முன் வைத்து பிரச்சினையை தீர்க்கலாம். எல்லோருக்கும் தெரியும் எமது மக்களின் பிரச்சனை என்ன? அதற்கான தீர்வு என்னவென்று. தெரிந்தவொரு விடயத்தை பேசித் தீர்ப்பதற்கு காலதாமதம் தேவையில்லை. இல்லையெனில் வருடக்கணக்கில் தமிழர்கள் அகதிகளாவதும், அகதி முகாம்களில் தஞ்சம் புகுவதையும் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. தங்கள் உறவுகள் கடத்தப்பட்டு இருக்கிறார்களா? இல்லையா என்பதே தெரியாமல் கேள்விக்குறியுடன் குமுறி அழும் மனைவிமார்கள், பிள்ளைகள், தாய்மார்களுக்கு யார் ஆறுதல் சொல்வது. ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தபோது ஒரே குரலில் ஒட்டுமொத்த தமிழர்களும் ஆதரவு தெரிவித்து அதற்கு உரம் ஏற்றினார்கள். ஆனால் இன்று ஒரு தமிழன் சக தமிழனை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை வந்துள்ளது. இதுதான் ஆயதப் போராட்டத்தின் வளர்ச்சியே தவிர றே எதனையும் சாதிக்க முடியவில்லை.

எதிர்கால வாழ்வு சூனியமாகி எதுவித அர்த்தமில்லா அவல வாழ்க்கை வாழ்ந்துவரும் எமது மக்களின துயர்துடைக்க ஆண்டவன்தான் அவதாரம் எடுத்துவர வேண்டுமா? இது நடக்குமா?

வாசகர்களுடன் ஒரு நிமிடம் ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

அது த.வி.கூ கூட்டணியின் கூட்டம் என அர்த்தம் பெற்றது. இல்லையெனில் அது தமிழரசு கட்சியின் கூட்டமாகவே தோன்றும். அதனால்தான் அமரர் அமிர்தலிங்கம் போன்றோர் எனது வரவால்தான் இந்தக் கூட்டணி என்ற பெயர் நிலைக்கின்றது என்று என்னை வெகுவாகப் பாராட்டுவார்கள். நான் என்றும் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் செயற்பட்டதில்லை. ஏனையோரும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற ரீதியில் செயற்படவில்லை. ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்களின் விடிவிற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து மிகவும் பொறுப்புடன் செயற்பட்டோம்.

1977ம் ஆண்டு தேர்தலில் நாம் 17 ஆசனங்களை பல விதமான போராட்டங்களுக்கு மத்தியில் வென்று இலங்கையில் முதலும் கடைசியுமாக தமிழர் ஒருவர் எதிர்கட்சித் தலைவராக வழி சமைத்தோம். அதன் பின்னர் இலங்கையின் அரசியல் சட்டத்தை எதிர்த்து நாம் அனைவரும் ராஜினாமா செய்து பாராளுமன்ற பதவியை துறந்தோம். பின்பு நடந்த தேர்தல்களில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பல பின்னடைவுகளைச் சந்தித்து வந்த வேளையிலும் எவரும் பதவி மோகம் இல்லாது செயற்பட்டோம். அந்த வேளையில் அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டு அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமான வேளையில் அப் பாராளுமன்ற பதவியையும் கட்சியின் செயலாளர் நாயகம் பதவியையும் தனக்குத்தான் தர வேண்டும் என்று அடம் பிடித்ததோடு மட்டுமல்லாமல் இல்லையெனில் தான் அலுவலகத்தை விட்டு வெளியேறப் போவதாகவும் கூறினார். தம்பி மாவைசேனாதிராஜா. அன்றுதான் தம்பி மாவை சேனாதிராஜாவின் உண்மையான சுயரூபம் அனைவருக்கும் வெளிப்பட்டது.

யுனெஸ்கோ விருது:
மௌனமாக்கப்பட்ட குரல்களுக்கு தரப்பட்ட அங்கீகாரம்

விருது பெற்று தமிழர்களுக்கு பெருமையை ஈட்டித்தந்த தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

யுனெஸ்கோ விருது பெற்று தமிழருக்குப் பெருமையை ஈட்டித்தந்த வீ.ஆனந்தசங்கரி அவர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

தமிழர் அனைவரையும் பெருமை கொள்ள வைக்கும் ஒரு பெரு நிகழ்வு நடந்தேறியிருக்கிறது. யுனெஸ்கோவின் (ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சாரம் என்பவற்றிற்கான அமைப்பு) விருதுகளில் ஒன்றான சகிப்புத்தன்மையை மேம் படுத்தல் மற்றும் வன்முறைக்கு எதிராகச் செயற்பட்டமைக்கான விருது இந்தமுறை தமிழர் ஒருவருக்குக் கிடைத்திருக்கிறது. அந்தப் பெருமையைத் தமிழருக்கு ஈட்டித்தந்த திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களை உலகம் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து பெருமைபெற வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

ஈழத்தமிழர் இன்று ஒரு சிக்கலான நிலையில் இருக்கிறார்கள். ஜனநாயகமும் கருத்துச் சுதந்திரமம் அவர்களுக்கு மறுக்கப்பட்ட துயரநிலை இருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இதற்குக் காரணம் யார் என்ற கேள்வி எழுவதும் அதற்குப் பதிலாக மௌனம் அமைவதும்தான் இன்றைய பொது அரசியல் நிலைப்பாடு. சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதாக மக்கள் நம்புவர்களே அதே மக்களின் குரல் வளையை நெரிப்பதும் மக்களை மௌனப்படுத்துவம்கூட யாராலும் மறுக்கப்படாத யதார்த்த நிலை. இந்த நிலை எண்பதுகளுக்கு முன்பு இருந்ததில்லை. இந்த நிலை கொலைகளாலும் ஏமாற்று வித்தைகளாலும் இன்று சாத்தியமாகி இருக்கிறது என்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள்.

சிங்களவர்களால் ஈழத்தமிழர்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள் என்ற உண்மை இருக்கும் அதே அளவிலேயே தமிழர்கள் தமிழர்களால் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற நிலையும் இருக்கிறது. ஒருபடி மேலே போயிருக்கிறதோ என்ற சந்தேகம் கடந்த பத்தாண்டுகளில் உலக நாடுகளின் மத்தியில் தோன்றி வலுப்பட்டிருப்பது சமீபகால நடவடிக்கைகளாற் தெளிவாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி உலக அரங்கில் பெற்றுத்தந்த அங்கீகாரமும் நம்பிக்கையும் இன்று இல்லை. இந்த சரிவிற்கு குறிப்பிட்ட ஒரு பகுதியினரே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கிக் கொடுத்த அத்திவாரத்தை வைத்து வீடு அமைத்தவர்கள் அதனைத் தொடர்ந்து கட்ட முடியாத நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள். வீட்டுக்கு நேரே புள்ளடி போட்டதால் உதித்த சூரியனின் நிறத்தைச் சிவப்பாகக் கண்டோம். அது பொதுவுடமை என்று நம்பினோம். ஆனால் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் சிந்தப்போகும் இரத்தத்தின் நிறம்தான் சிவப்பு என்ற நிலைப்பாட்டிற்கு தமிழ் அரசியலை சில சக்திகள் தள்ளி வந்து விட்டார்கள்.

கொலைகளோ, உரிமை மறுப்புக்களோ தமிழர் விடுதலையை உருவாக்கப் போவதும் இல்லை. உரிமைப் போராட்டத்தை நியாயப்படுத்தப் போவதும் இல்லை. எழுபதுகளின் ஆரம்பத்தில் ஈழத் தமிழ் இளைஞர்கள் திரண்டபோதும் தமிழருக்கு தலைமை இருந்தது. தலைமையை விமர்சிப்பவர்களுக்கு உரிமையும் இருந்தது. காத்திரமான ஒரு நிலைமையில் கூர்மையான அரசியலை தமிழர் விடுதலைக் கூட்டணி செய்து காட்டியது. என்று கூட்டணி பலமிழந்ததோ அன்றே தமிழர்களின் ஜனநாயகக் குரலும் மௌனமாயிற்று. விடுதலையையும், போராட்டத்தையும் தனது சொத்தாக பறித்தெடுத்த ஆயுதத் தலைமை இன்று உலக அரங்கில் ஆயுதப் போராட்டமும் வன்முறையும் தனிமைப்படுத்தப்பட்டு வரும் அவல நிலையை தமிழர்கள் கையறு நிலையில் நின்று வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். தமிழர்களின் உரிமைப் போராட்ட முனைப்புச் சக்தியை ஆதரிப்பவர்களே எதுவும் செய்ய முடியாமலும் செய்யாமலும் நழுவிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தனி மனிதனான அமிர்தலிங்கம் இல்லாத குறை இன்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

விலை மதிக்கமுடியாத மாணிக்கத்தை கருங்கல்லாற் குத்திச் சிதைத்த கதை அமிரின் கொலையோடு முடியவும் இல்லை. அமிரை "அதி மாமனிதர்" என்று இன்று அவரை கொலை செய்தவர்களை ஆதரித்தவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். சிங்களவர்களால் செய்யப்படும் வன்முறைக்கு எதிரானவர்களாக அடையாளம் காணப்படும் அனைவரும் தமிழர்களிடையே இருந்து வரும் வன்முறைக்கு எதிராகப் பேசுவதற்குக்கூட கூச்சப்படுகிறார்கள். அல்லது பயப்படுகிறார்கள். கருத்துச் சுதந்திரம் மிகுந்த கனடா போன்ற நாடுகளில் வாழ்பவர்களே இப்படியாக இருக்கிறார்கள் என்றால் இலங்கையில் வாழும் தமிழர்களிடையே உள்ள நிலைமைய எப்படி விபரிப்பது?

இலங்கையில் வாழ்ந்து கொண்டே உயிராபத்தை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டே கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்துவதற்கு மாபெரும் துணிவு வேண்டும். தன் கருத்தை வெளிப்படுத்துவதில் எந்த ஆபத்து வந்தாலும் அஞ்சாத தமிழன் என்ற பெருமை அமரர் அமிரோடு போய்விடவில்லை. அதன் தொடர்ச்சியாகத் தலைவர் ஆனந்தசங்கரி இன்று எம் கண்முன்னே நிற்கிறார். தலைவர் ஆனந்தசங்கரி ஆபத்துக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டே தன் கருத்தை துணிந்து சொல்லிவரும் ஒரு அதிமாமனிதர்.

இன்றைய நிலையில் பலம் கொண்ட ஒரு ஆயுதத் தலைமைய விமர்சித்து (எதிர்த்து அல்ல) ஒரு கருத்தைச் சொல்லுவது சுலபமான காரியம் அல்ல. அதற்கு ஆழமான அரசியல் அறிவும் அனுபவமும் அவசியம்!. அவற்றை தன்னிடம் கொண்ட ஆனந்தசங்கரி அவர்கள் காலத்தின் கட்டாயத்தால் மௌனமாக்கப்பட்ட பலரது குரலைத் தன் வழியாக எழுப்பி வந்திருக்கிறார். அதன் விளைவை உலக நிறுவனங்கள் கவனமாக அவதானித்து வந்ததன் விளைவே இன்று அவருக்கு கிடைத்திருக்கும் "யுனெஸ்கோ" விருதாகும். இந்த விருது எமது தலைவர் ஆனந்தசங்கரிக்குக் கிடைத்த விருது மட்டுமல்ல. மௌனமாக்கப்பட்ட பலரின் குரல்களுக்குத் தரப்பட்ட அங்கீகாரம். தலைவர் ஆனந்தசங்கரி இன்று ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட பெருந் தலைவர்களில் ஒருவராக இருக்கிறார். இந் நிலையைப் புரிந்து கொண்ட ஒரு சிலரே அவர் மீது சேற்றைவாரி வீசவும் பிரச்சாரப் பீரங்கிகளாக இருப்பதையும் உலகம் மௌனமாக கேலிப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

விருது பெற்ற நம் தலைவர் ஆனந்தசங்கரி அவர்களை கனடாத் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை பெருமையுடன் வாழ்த்துகிறது. இந்த இடத்தில் "நாய்கள் குரைத்தாலும் ஒட்டகம் தன் பயணத்தைத் தொடரும்" என்ற கருத்துப்பட சொல்லப்படும் பழமொழியை நினைவுபடுததிக் கொள்வோம். எம் மக்கள் உரிமையும் சுதந்திரமும் மீட்கப்பட வேண்டிய இன்றைய காலகட்டத்தில் நம் தலைவரின் பணியின் முக்கியத்தை உணர்ந்தே 'யுனெஸ்கோ' இந்த விருதை வழங்கியிருக்கிறது. அதன் மூலம் ஈழத் தமிழரை பெருமைப்படுத்தியிருக்கிறது. ஜனநாயக சக்திகளிற்கு ஊக்கமளித்து உள்ளது.

தலைவர் ஆனந்தசங்கரியின் பணியைத் தொடர்ந்து செய்யும் பலர் இன்னும் உருவாகுவார்கள் என்ற நம்பிக்கையுடன் தலைவர் ஆனந்தசங்கரியின் உலகளாவிய பெருமையைக் கண்டு மகிழ்ச்சியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியிள்ன கனடாக் கிளை வாழ்த்தி நிற்கிறது.

வாழ்க அவரது தன்னலம் கருதாத் தமிழ்ப் பணி!

க. கதிர்காமநாதன்
செயலாளர் த.வி.கூ - கனடா கிளை

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவருடன் சந்திப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் தலைமையில் மூன்று தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பின் (த.வி.கூ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்) தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் அமைச்சரும் சர்வகட்சி குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸவிதாரணவை சந்தித்து இனப்பிரச்சினை தீர்வு திட்ட யோசனைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக சர்வகட்சி குழுவின் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்ததுடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு அவசியம் என்பதனையும் சர்வகட்சிக் குழுவின் தலைவரிடம் வலியுறுத்தினர்.

சர்வகட்சி குழுவின் நடவடிக்கைகள் குறித்து விளக்கிக் கூறிய அமைச்சர் திஸ்ஸவிதாரண தீர்வு யோசனைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள், மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்த ஆலோசனைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். கடந்த 08.05.2007 அன்று இடம்பெற்ற இந்த சந்திப்பில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் ஈ.பி.ஆர்.எல்.எவ் யாழ் பிராந்திய செயலாளர் சிவராஜா மோகன் ஆகியோர் பங்குகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினையும் அதற்கான தீர்வும்

அண்மையில் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்கள் இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தென்னாபிரிக்க பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை

எமது நாட்டில் பல தலைமுறைகளாக சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், பறங்கியர், மலாயர் இன்னும் பல சிறு குழுவினர்கள் சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்ந்து வந்தனர். மனித உரிமை மீறல்கள், நியாயமற்ற பாகுபாடுகள், சுரண்டல்கள் காரணமாக 1972 தொடக்கம் பல வன்முறை சம்பவங்கள் நடந்தேறின. இதில் தமிழர்களும், இஸ்லாமியர்களுமே பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களாவர். இவ்விரு சாராரும் தமிழ் பேசுகின்றவர்களே. தமிழ், இஸ்லாமிய மக்களின் பாதுகாவலர் என க்கூறி பல தமிழ் குழுக்கள் உருவாகின. ஆனால் விடுதலைப் புலிகள் என்னும் இயக்கத்தின் துப்பாக்கிப் பலத்துக்கு ஏனைய குழுக்களால் ஈடுகொடுக்க முடியாமையால் அக் குழுக்கள் அழிக்கப்பட்டும், மௌனமாக்கவும் பட்டன. தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுவதாக மார்தட்டி வந்த விடுதலைப் புலிகள் வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லீம்களை விரட்டியடித்தனர். எந்த குற்றமும் புரியாத முஸ்லீம் மக்கள் பல தலைமுறைகளாக தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த இவர்கள் தம் சொத்துக்கள், இருப்பிடங்கள் அத்தனையையும் துறந்து வெறும் 500 ரூபாவுடன் வெளியேற்றப்பட்டனர். சிறுமிகளின் காதுகளில் இருந்த காதணிகள் கூட பறிக்கப்பட்டன. இவர்கள் கடந்த 15 ஆண்டுகாலமாக அடிப்படைத்தேவைகள் மற்றும் பிரத்தியேக வாழ்க்கை இன்றியும் 136 அகதி முகாம்களில் புத்தளம், அனுராதபுரம், போன்ற பகுதிகளில் வாழ்ந்து வருகின்றார்கள். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் வேறு எந்த இனத்தவரோ அகதி முகாம்களில் வாழும்வரை நாம் எமது ஜனநாயக கோட்பாடுகள் பற்றி பெருமை கொள்ளும் உரிமை கிடையாது. எம்மில் ஒரு பகுதி மக்கள் ஜனநாயக, அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்பட்டு பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது நமது நாடு முழு ஜனநாயக உரிமையுடன் வாழும் நாடாக கருதமுடியாது. இத்தகைய உரிமைகள் இழப்பானது அடிமைத்தனத்துக்கு சமமானதாகும். ஒரு உண்மையான தேசப்பற்றாளன் தன் நாட்டையும் அந் நாட்டில் வாழும் மக்களையும் நேசிப்பவனாகவும், அம் மக்களுடைய ஜனநாயக உரிமைகளை பேணி காப்பவராகவும் இருத்தல் வேண்டும். தன் நாட்டையும் அந் நாட்டு மக்களையும் நேசிப்பவனும், தத்தமது மதக் கோட்பாடுகளுக்கமைய நீதியாகவும், நேர்மையாகவும் தம் மதத்தை நேசிப்பவனும் இணைந்தால் எமது மக்களை விடுதலையடையச் செய்வது மிகவும் கஷ்டமான காரியமல்ல. சிங்களவர்களோ, தமிழர்களோ இஸ்லாமியர்களோ அல்லது வேறு எந்த இனத்தைச் சேர்ந்த இளைஞர்களோ அவசியமற்று யுத்தமுனையில் இரத்தம் சிந்துவதும், அநியாயமாக பலியாகவும் வேண்டுமா? நம் நாட்டுப் பிரச்சனைக்கொரு தீர்வு காண வேண்டிய நேரம் வந்துவிட்டதென நான் நம்புகிறேன். சமாதானம் எமது கதவை தட்டுகிறது. அவசியம் எற்படின் சர்வதேச சமூகத்தின் உதவியோடு நாம் இலங்கையர் அனைவரும் ஒன்று சேர்ந்து சமாதானத்தை உள்ளே அனுமதிக்க வேண்டாமா?

விடுதலைப் புலிகள் சக்திமிக்க இயக்கமாக வளர்ந்து இலங்கை அரசை மட்டுமன்றி சர்வதேச சமூகத்துக்கும் சவால் விடுவது இரகசியமான விடயமல்ல. சிறிதாக இருந்தபோதிலும் அண்மையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதல் அனைவருக்கும், குறிப்பாக அயல் நாடான இந்தியாவுக்கு சவாலாக அமைந்துள்ளது. வடக்கு கிழக்கில் தமிழர்களும், இஸ்லாமியர்களும் பிணைக் கைதிகளாக்கப்பட்டுள்ளனர். தென்னிலங்கையில் சிங்களவர்கள் மத்தியில் வாழும் தமிழர்களும் இடம்பெயர்ந்து மேற்கத்தைய நாடுகளிலும், மற்றும் கனடா, அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளிலும் அக்கறையான கவனிப்புக்கள் இருந்தும்கூட விடுதலைப் புலிகளின் மிரட்டல் காரணமாக பயத்துடனும் பீதியுடனும் வாழ்கின்றனர். உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பெரும்பான்மையான தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் இருப்பதோடு, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை மேன்மைப்படுத்துவதும், மாற்றுக் கருத்துக்கொண்ட ஸ்தாபனங்கள், தனி நபர்களை திட்டித் தீர்ப்பதிலேயே ஈடுபட்டுள்ளனர். சமஷ்டி தீர்விற்காக போராடிவரும் என்னைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. ஐரோப்பிய யூனியனின் 25 நாடுகளிலும், பிரித்தானியா அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற வேறு சில நாடுகளிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் சில நாடுகளில் அவர்களுடைய நடைமுறைகள் கட்டுப்படுத்தப்படவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதாகக் கூறிக் கொண்டு கனடிய பொலிசாரின் கணக்களில் மண்ணை தூவி விட்டு 2006 நவம்பர் 27 இல் ரொரன்ரோவில் புலிக்கொடி ஏற்றுவது, உட்பட மாவீரர் தினத்தை கொண்டாடி உள்ளனர். அதேபோன்று பாரிஸ் நகரில் பெருமளவிலும். சிறிதளவில் லண்டனிலும் நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. இலங்கை அரசு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதில் தாமதம் காட்டுவதால் அதிருப்தியடைந்த சில நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதில் பாராமுகம் காட்டுவது போல் தோன்றுகிறது.

வேலுப்பிள்ளை பிரபாகரன் 2006 நவம்பர் 27 இல் ஆற்றிய மாவீரர் தின உரையில் புத்திசாலித்தனமாக சமஷ்டி ஆட்சி முறையை தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றுத்திட்டமாக முன் வைப்பார் என்ற எதிர்பார்ப்புடன் செவிமடுத்தேன். சர்வதேச சமூகம் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி முறையை விரும்புகிறது என்பது பிரபாகரன் அறிந்ததே. இந்தியாவின் எதிர்பார்ப்பும் அதுவே. ஆனால் பிரிவினை பற்றி அவர் பேசியது சர்வதேச சமூகத்துக்கு அவர் விடுக்கும் சவாலாக அமைந்தது. திரு பிரபாகரன் உயிரிழந்த 18,842 போராளிகளில் 818 பேர் 2006ம் ஆண்டு பலியானதாக கூறுகின்றார். இக் கூற்றை நான் திருத்த விரும்புகின்றேன். இந்த 18,842 அப்பாவி தமிழ் இளைஞர்கள் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் விருப்புடன் அன்றி மூளைச்சலவை செய்யப்பட்டு யுத்தமுனைக்கும், தற்கொலை குண்டுதாரியாகளாகவும் அனுப்பப்பட்டனர். அநேகமானவர்கள் பலாத்காரமாக சேர்க்கப்பட்டு முழுமையாக மூளைச்சலவை செய்யப்பட்ட ஏழைப் பெற்றோரின் பிள்ளைகளாவர். எதிர்க்கவும் தைரியமற்று மௌனமாக கண்ணீர் சிந்துவதோடு சில பிற நாடுகளின் உதவியோடு பிற நாடுகளில் கல்வி பயிலும் அதிஷ்டசாலிகளான விடுதலைப் புலிகளின் பிள்ளைகளை

பொறாமையுடன் பார்க்கிறார்கள். எந்தெந்த நாடுகள் இதற்கு உதவின என்பதை தெரிந்திருந்தும் அதை நான் கூற விரும்பவில்லை. 18,842 தமிழ் இளைஞர்கள் யுத்த முனையில் தமதுயிரை அர்ப்பணித்துள்ளதாக பிரபாகரன் கூறுகின்றார். மாற்று இயக்கங்களைச் சேர்ந்த பல இளைஞர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், பல்வேறு தரப்பட்ட அரச ஊழியர்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இது தவிர பல்லாயிரக்கணக்கான சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லீம்களும் ஏனையோரும் பஸ், புகையிரதம், மத்திய வங்கி போன்ற அரச கட்டிடங்களில் நடத்தபட்ட குண்டுத்தாக்குதல்களிலும் 30,000 இற்கும் மேற்பட்ட பொலிஸ், இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகிய படைப்பிரிவைச் சேர்ந்தோர் கிளேமோர் கைக்குண்டுத் தாக்குதல்களிலும், யுத்தக்களத்திலும் இறந்துள்ளனர். பல்லின மத மக்கள் 70,000இற்கு மேற்பட்டவர்களின் மரணத்திற்கு பிரபாகரனே பொறுப்பேற்க வேண்டும். புத்திசாதுரியமற்ற இவரின் செயலால் கை, கால்கள் இழந்தோர், பார்வை இழந்தோர் பல்லாயிரக்கணக்கினர். விதவைகள், அனாதைகள் ஆக்கப்பட்டவர்களும் அவ்வாறே.இவ்வாறு பாதிக்கப்பட்ட பலர் கையேந்தியும், கௌரவமற்ற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். இதனால் கொடூரமான பயங்கரவாத இயக்க த்தின் தலைவன் என்ற அவப்பெயரை பிரபாகரன் சம்பாதித்துள்ளார். தமது கலாச்சாரம், நாகரீகம், பண்பாடு பற்றி பெருமை கொள்கின்ற தமிழினத்திற்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார்கள். அவரால் ஏற்படுத்தப்பட்ட இந்த அவப்பெயர் என்றும் அழியாது. பிரபாகரனுடைய கொள்கை விளக்கத்தால் அதிருப்தி அடைந்தவர்களில் நானும் ஒருவன். பெருமளவில் அவருடைய ஆட்களால்,குறிப்பாக வடக்கு கிழக்கில் சொல்லமுடியாத துன்பங்களை அனுபவிக்கும் தமிழ் மக்கள் மீது அவர் அனுதாபம் காட்டுவார் என எதிர்பார்த்திருந்தேன்.24 ஆண்டுகாலமாக அவருடையதும், அவருடைய ஆட்களினதும் அடக்கு முறையால் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் இரும்புத் திரைக்குப் பின்னால் நடைபெறும் அட்டூழியங்கள் பற்றி வெளி உலகுக்கு தெரியாது. யாரும் உட்புக முடியாத புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தடுப்பு முகாம்கள், சித்திரவதை முகாம்கள், இருட்டறைகள், ஆட்கடத்தல், கொலைகள, சிறுவர்களை யுத்த நடவடிக்கைகளுக்காக சேர்த்தல், அதை ஆட்சேபிக்கும் பெற்றோர்களை அச்சுறுத்தல் போன்ற புலிகளை கண்டிக்கும் என்னால் முன் வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களை யாரும் மறுக்கவில்லை. தமக்கொரு வாய்ப்பு கிடைப்பின் மக்கள் தப்பியோட தயாராக உள்ளனர். ஆனால் பிற அலுவல்களுக்கு போக வேண்டியவர்கள் நெருங்கியவொரு உறவினரை பிணை வைத்து செல்வதால் யாராலும் தப்பி செல்ல முடியவில்லை. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தம் மை விடுவிப்பதற்கு மிகவும் முயற்சிக்கின்றனர்.

வடக்கு கிழக்கிற்கு இந்திய பாராளுமன்ற குழுவினர் விஜயம் செய்ய வேண்டுமென விடுதலைப் புலிகள் சார்பில் வைக்கப்பட்ட பிரேரணையை, விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்கும் அவர்கள் விஜயம் செய்ய வேண்டும் என்றும் மக்கள் எத்தனை பரிதாபமாக வாழ்கின்றார்கள் என்றும், ஏதேனும உரிமைகளை அனுபவிக்கின்றார்களா? என்பதையும் பார்வையிட வேண்டுமென்ற பிரேரணையை நான் முன் வைத்தேன் அப் பேச்சு அத்துடன் நின்று விட்டது. பிரபாகரன் மாவீரர் தின உரையில் உண்மைக்கு புறம்பான விடயங்களை முன் வைத்தமையால் அதை அவ்வாறே விட்டுவிட முடியாது.சர்வதேச சமூகம் உண்மை நிலையை அறிவதற்கு வேண்டிய வசதிகளை கொண்டிருப்பதால் விடுதலைப் புலிகள் அவர்களை மட்டமாக கருதி இஷ்டம்போல் புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட முடியாது. பிரபாகரனின் உரை, மற்றும் நடவடிக்கைகள் ஆகியவை சம்பந்தமாக எனது அபிப்பிராயத்தை கூற வேண்டிய கடமை எனக்குண்டு. போர்நிறுத்த உடன்படிக்கை தோல்வியடைவதற்கான முழுப் பொறுப்பையும் அவரே ஏற்க வேண்டும் 176 தடவை மட்டும் அரச தரப்பினர் போர் நிறுத்தத்தை மீறியுள்ளவேளை 3500 இற்கு மேற்பட்ட தடவைகள் விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை மீறியுள்ளனர். விடுதலைப் புலிகள் அரசையும்,வேறு எவரையும் குறைகூற முடியாது. போர்நிறுத்த உடன்படிக்கை அரசியல பணிக்காக மட்டும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சிறு குழுக்களாக பிரவேசிக்க விடுதலைப் புலிகளுக்கு அனுமதி வழங்கியது. ஆனால் அவர்கள் அரசியலை தவிர மற்றைய எல்லா பணிகளிலும் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய நடவடிக்கைகள் ஆட்கடத்தலில் இருந்து கொலைகள் வரை நீடித்தன. இவை நோர்வே நாட்டைச் சேர்ந்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் பிறரை விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டுவது அர்த்தமற்ற செயலாகும். 2002 மாசி மாதம் 22ம் திகதி செய்யப்பட்ட போர்நிறுத்த உடன்படிக் கையின் அடிப்படையிலேயே நீண்டகாலமாக புலிகளால் பூட்டி வைக்கப்பட்டிருந்த ஏ-9 பாதை திறக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அத்துமீறி அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு புகுவதற்கு முயற்சித்தமையினாலேயே முகமாலை சோதனைச்சாவடி மூடப்பட்டது. அதற்கு விடுதலைப்புலிகளே பொறுப்பு. அவ்வாறு மீண்டும் நடைபெறாது என்ற உறுதியுடனும் ஏ-9 பாதையில் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடமாடடோம் என்ற வாக்குறுதியுடனும், வரி அறவிடுவதையும் நிறுத்துவதாகக் கூறி ஏ-9 பாதையை இன்றும் திறக்க வைக்க முடியும்.

விடுதலைப் புலிகள் நாட்டுப் பிரிவினையையே குறிக்கோளாகக் கொண்டுள்ளார்களே அன்றி இனப்பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வுக்குத் தயார் என்பதை அவர்கள் விசுவாசமாக நிருபிக்கவில்லை. வன்முறை அதிகரிப்பதற்கு அவர்களே பொறுப்பு. மாற்றுக் குழுக்களை கொல்வதாலும், கிளேமோர், கைக்குண்டுகள் மூலம் அரச படைகளின் உயிருக்கு சேதம் ஏற்படுத்துவதன் மூலமும் வன்முறை கூடுவதற்கு இவர்களே பொறுப்பாக உள்ளனர். அவ்வாறு நடக்கும் ஒவ்வொரு சம்பவத்திலும் அப்பாவி பொது மக்கள் இறப்பதும், படுகாயமடைவதும் சகஜமாகி விட்டது. விடுதலைப் புலிகள் தமது சகாக்களிடமிருந்து பொது மக்களை பாதுகாக்க தவறியதாலும், அடிக்கடி அவர்களுக்கு ஆபத்து நிலையை ஏற்படுத்துவதாலும் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துவிட்டது மட்டுல்லாமல் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையையும் இழந்து விட்டனர். அவர்கள் வன்முறையை கைவிட்டு ஏனைய தமிழ், முஸ்லீம் குழுக்களுடன் சேர்ந்து பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்ப்பதற்கு வழி வகுக்க வேண்டும்.

நான் பிரபாகரன் அவர்களுக்கு கூறுவது என்னவெனில் அவருக்கும் அவர்களுடைய சகாக்களுக்கும் அனுசரணையாளர் மூலமும் சர்வதேச சமூகத்தினர் மூலமும் பொது மன்னிப்பு பெற்றுக்கொடுக்க முடியும். ஆயுதத்தை கைவிட்டு அரச பாதுபாப்பை ஏற்பாரேயானால். நிர்வாகத்தில் பங்கேற்கக்கூடிய வகையில் பேச்சுவார்த்தை நடத்த முடியும். சிங்கள மக்களைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. பிரிவினையைக் கைவிட்டு சமஷ்டி ஆட்சி முறையை ஏற்பதாக பகிரங்கமாக கூறுவாரானால் பெருமளவில் சிங்கள மக்கள் ஆதரவளிப்பர். விடுதலைப் புலிகளாலே பெருமளவில் பாதிக்கப்பட்ட அப் பிரதேசங்களை மீள் கட்டியெழுப்ப சர்வதேச சமூகம் உதவியும் ஒத்தாசையும் வழங்கும். அநேக பிரச்சனைகள் பிரபாகரனாலும் அவருடைய சகாக்களாலுமே ஏற்படுத்தப்பட்டன. திருகோணமலையில் அமைதியாக வாழ்ந்த மூவின மக்கள் மத்தியில் பொதுச்சந்தைக்குள் வைக்கப்பட்ட குண்டு சிறு இனக்கலவரத்தை ஏற்படுத்தியது. இறுதியில் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே.மாவிலாறு,மூதூர்,வாகரை ஆகிய பிரச்சினைகள் புலிகளாலேயே ஏற்படுத்தப்பட்டன. ஆனால் கஷ்டப்பட்டவர்கள் பொது மக்களே.

தம்பி பிரபாகரன் யுத்தத்தில் தோற்றுக் கொண்டிருக்கிறார் ஓரளவுக்கு அவர் அரசோடு தொடர்ந்து போராடலாம், ஆனால் சர்வதேச சமூகத்தைப் பகைத்துக் கொண்டு அவர் அவர்களுடன் போராடமுடியாது. அவர் மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டார்கள். அவருடைய சகாக்களின் கொடூரச் செயல்கள் தமிழ் மக்களை பெருமளவில் பாதித்துள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லீம் மற்றும் ஏனைய இன மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர். நாம் எமது இல்லங்கள்,பாடசாலைகள், எமது சேமிப்புக்கள் எம்மால் சேமித்து வைக்கப்பட்ட பல பொருட்கள், தொழில்கள், எமது இன பந்துக்கள் எல்லாவற்றுக்கும் மேலாக நாம் பெரிதும் பேணி வந்த கலாச்சாரம், நாகரீகம் ஆகியவற்றை இழந்து விட்டோம். சிங்கள சமுதாயத்தைப் பற்றி அவர் கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் இனவாதம் ஒரு துளியாவது இருக்கத்தான் செய்யும். ஜேர்மனிக்கு சென்று பாருங்கள்! அங்கே சில நாஜிக்கள். ஐக்கிய இராச்சியத்துக்கு செல்லுங்கள் அங்கே சில மொட்டைத்தலைகள். இது போன்ற சிறு சிறு குழுக்கள் உலகம் முழுவதிலும் ஏன் எங்கள் கிராமங்களில் கூட உண்டு. ஆனால் ஒரு சாதாரண ஜேர்மன் பிரஜையை, ஒரு பிரித்தானியரை, அல்லது வேறொரு நாட்டவரை பாருங்கள் அவர்களுடைய பரந்த மனப்பான்மை, தாராளக்குணம், ஜனநாயகத்துக்கும், மனித உரிமைக்கும் அவர்கள் கொடுக்கும் மதிப்பு பிரபாகரனை தலைகுனியச் செய்யும். அவர்களது தரத்தைக் கொண்டு ஏனையவர்களை எடை போடகூடாது.

இன்றும் அரசியலில் தீவிரமாக இயங்கும் 50 ஆண்டுகளுக்கு மேல் அரசியலில் தோய்ந்த ஓர் முதிய தமிழன் நான். எமது தலைவர்கள் பலர் விடுதலைப் புலிகளின் துப்பாக்கியால் மௌன

தொடர்ச்சி 4 ம் பக்கம் பார்க்க ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வாவின் 109 வது பிறந்ததினம்

வருங்கால சந்ததியினருக்காக சமூகத்தை முன்னேற்ற அர்ப்பணிப்புடன் உறுதி பூணுவோம்

ஈழத்து காந்தி "பெரியவர்" தந்தை என்று அனைத்துத் தமிழ் பேசும் மக்களாலும் அன்போடும் மரியாதையோடும் அழைக்கப்பட்ட மூதறிஞர் சா.ஜே.வே செல்வநாயகம் அவர்கள் "கண்ணியம்" மிக்கவராய், "நெஞ்சுறுதி" உடையவராய் "பொறுமை" யின் சிகரமாய், "தீர்க்கதரிசனம்" கொண்டவராய் ஒரு நேர்மையான அரசியல் வாதியாக தமிழ் பேசும் மக்களின் தலைவனாக விளங்கினார். எவரையும் மனதால்கூட சினந்து பேசத்தெரியாத பெருமனம் கொண்டவர், எந்த ஒரு உயிருக்கும் அழிவு ஏற்படுவதை விரும்பாத அகிம்சையில் பெரும் நம்பிக்கைக் கொண்டவர். பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் தோல்வியில் முடிந்த பொழுதிலும் தளர்ந்து விடாது நம்பிக்கையோடு பின்னர் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் எல்லாம் கலந்து கொண்டவர்.

1947 பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய பின் கொண்டு வரப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டம், இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம் என்பவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தான் பிரதிநிதித்துவப்படுத்திய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து கொள்கைக்காக விலகிய உத்தமர். தமிழரசு கட்சியை ஸ்தாபித்து தான் இறக்கும் வரை தமிழ் பேசும் மக்களின் துயர் தீர்க்கும் பணிக்கு தன்னையும், தனது பெரும் செல்வத்தையும் அர்ப்பணித்த பெருமையுடையவர்.

1972ல் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பின் பாதகத்தை உணர்ந்து தான் பிரிந்த கட்சியின் தலைவரை நேரில் சென்று ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தி தமிழர் கூட்டணி அமைக்க அரும்பாடுபட்டவர். தந்தையவர்கள் ஏற்படுத்திய கூட்டு முயற்சி இன்று சின்னா பின்னமாகி பல்வேறு தமிழ், முஸ்லீம் அரசியல் கட்சிகள் உருவாக்கம் பெற்றதுடன் தற்போது தேர்தல் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அகிம்சையின் வழியிலான தத்துவம் மாறி இன்று ஆயுதப் போராட்டத்தின் மூலமே விடுதலைக்கு வழி என்று கூறி தந்தையின் அணியிலிருந்த பலர் பிரிந்து சென்று போராடுகின்றனர்.

தமிழ் சமூகம் அதிருப்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதனால்தான் உணர்ச்சி மிக்க சில இளைஞர்கள் ஆயுதங்களை தூக்கியுள்ளனர். ஆயுதங்கள் அழிவுக் கருவிகள். ஆயுதத்தை தூக்கிய வருக்கும் அது அழிவைக் கொடுக்கும். அகிம்சை அப்படியானதல்ல. அகிம்சை போராடுபவர்களின் தார்மீக உணர்வை வளர்க்கும். போராடுவோரை ஆளவோ அன்றி அடக்கவோ, முடியாத நிலைமையை ஆளவும், அடக்கவும் முயல்வோருக்கு ஏற்படுத்தும். அகிம்சைப் பாதையில் தான் எமது போராட்டம் அமையும். அதிலிருந்து சற்றும் விலக மாட்டோம்.

தந்தையின் இந்த இறுதி வார்த்தைகளை மனச்சாட்சியுடன் கைக்கொள்ளும் எவருமில்லை என்று துணிந்து சொல்ல முடியும். ஏதோவொரு வகையில் வன்முறையை ஆதரித்துக் கொண்டு- தந்தையின் பெயரைக் கூறிக்கொண்டு -அகிம்சையைப் பற்றிய எள்ளளவு அறிவும், அனுபவமுமின்றி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவரது கட்சியிலிருந்து அரசியற் பணிபுரிபவர்களுக்காகவோ என்னவோ தந்தை கூறிய வார்த்தை "கடவுள்தான் தமிழரைக் காப்பாற்ற வேண்டும்" என்று. தந்தையின் மறைவுக்குப் பின்னர் சுமார் 30 வருட காலத்தில் தமிழ் பேசும் மக்களின் அன்றிருந்த சுதந்திர வாழ்க்கை கேள்விக்குறி

யாகி அகதி முகாம்களிலும், சிறைக் கூடங்களிலும், வெளி நாடுகளிலும் குறிப்பாக தென் இந்தியாவிலும் அவர்கள் வாழ்வு பெரும் அவலமாகி விட்டது. தந்தையவர்கள் இருந்த காலத்தில் இருந்த சுதந்திரமான வாழ்க்கை இன்றில்லை.

தந்தையவர்களின் 109வது பிறந்ததின நாளில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் பூரணமாகத் தீர்க்கப்பட வேண்டும். மூடப்பட்டிருக்கும் ஏ-9 வீதி திறக்கப்பட வேண்டும். சந்தேகத்தின் பேரில் கைதாகி சிறையில் வாடுபவர்கள் நடந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும். தொடரும் வன்முறைகள்,தாக்குதல்கள்,கடத்தல்கள், கொலைகள் கப்பம் பெறல் போன்ற அநீதியான செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். அகதி முகாம்களில் வாழும் அப்பாவி மக்கள் மீள அவர்களுடைய சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்.

இன்று ஓரளவு வசதிவாய்ப்புடைய வடக்கை விட எந்த உதவிகளும் இல்லாமல் கிழக்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மிகவும் பாரியளவு பாதிக்கப்பட்டு அகதிகளாக முகாம்களிலும் தெரிந்த நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாழ்கின்றார்கள். ஒற்றுமையுடன் மக்கள் போராட்டத்திற்கென தம்மை அர்ப்பணித்த அனைவரும் கடந்த கால கசப்பான அனுபவங்களை ஒருபுறம் வைத்துவிட்டு மக்களுக்காக அவர்களது அமைதியான வாழ்வுக்காக ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். எமது வருங்கால சமூகத்தையாவது பிரச்சனையின்றி அமைதியான ஜனநாயகச் சூழலில் வாழ வழி சமைக்க தந்தை செல்வாவின் பிறந்த தினத்தில் அர்ப்பணிப்புடன் உறுதி பூண்டு செயற்பட வேண்டும் என தந்தையின் பெயரால் தயவாகக் கேட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

தங்க முகுந்தன
முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர்
தமிழர் விடுதலைக் கூட்டணி

இனப்பிரச்சினையும் அதற்கான..

3ம் பக்கத் தொடர்ச்சி

மாக்கப்பட்டு விட்டார்கள். அடுத்த ஜுன் மாதம் எனக்கு 74 வயதாகி விடும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகால உறுப்பினராகிய நான் இனறு அக்கட்சியின் தலைவராக பணியாற்றுகின்றேன். அகிம்சையை பின்பற்றும் இம்மிதவாத கட்சி 1972ம் ஆண்டு ராசாத்தி அப்புக்காத்தாக இருந்த ஈழத்து காந்தியென அன்போடு மக்களால் அழைக்கப்பட்ட திரு.எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களால் உருவாக்கப்பட்டது. 1970ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றம் புகுந்த நான் இலங்கை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு அரசியல் கட்சிகளின் உயர்ந்த தலைவர்களுடன் செயற்பட்டவன். அத்தகையவொரு தலைவர் கென்ய நாட்டின் பெரும் தலைவராகிய காலம் சென்ற ஜனாதிபதி கலாநிதி ஜோமோ கென்யாடா அவர்களின சகபாடி கலாநிதி என். எம். பெரேரா ஆகும்.

சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களோடு வாழ்ந்து சிங்கள,தமிழ், முஸ்லீம் மாணவர்களோடு இணைந்து கல்வி பயின்று, சிங்கள, தமிழ், முஸ்லீம் மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்து கல்வி போதித்து சிங்கள, தமிழ் முஸ்லீம் ஆசிரியர்களால் கல்வி போதிக்கப்பட்டுள்ளேன். இதை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பாக்கியம் பெற்றவனாகவே கருதுகின்றேன். ஆகவே இம் மூவின மக்களுடைய பழக்க வழக்கங்களை நன்கு அறிந்து வைத்துள்ளேன். 2006ம் ஆண்டு க்குரிய பொறுமையையும், அகிம்சையும் வளர்த்தமைக்காக யுனெஸ்கோ(**UNESCO**) மதன்ஜித்சிங் விருது எனக்கு வழங்கப்பட்டது. இருப்பினும் விடுதலைப் புலிகள் நான் கூறுவதை கேட்கும் நிலையிலோ அன்றி ஆலோசனையை பெறும் நிலையிலோ இல்லை சுயமாக சிந்திக்கும் நான் எவரிடமும் விலைபோகக் கூடியவனும் அல்ல.எவரினதும் முகவராகவும் செயற் படவில்லை. எனது நாட்டுக்கும், மக்களுக்கும் செய்ய வேண்டிய கடமை எனக்குண்டு. அது மிகவும் வேண்டப்படும் கௌரவமான முறையில் ஏற்படும் தீர்வோடு கூடிய சமாதானமாகும்.

மாணவர்களையும், புத்திஜீவிகளையும், எழுத்தாளர்களையும் சிங்கள பௌத்த இன பேதம் தனக்குள் அடக்கி வைத்திருக்கின்றது என்ற குற்றச்சாட்டை என்னால் ஏற்க முடியாது. இக் கருத்து பிழையென்று வாதாடும் தார்மீக கடமை தமிழனாக இருந்தபோதிலும் எனக் குண்டு. ஏனெனில் கடந்த சில ஆண்டுகளுக்குள் சிங்கள மக்களின் சிந்தனையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதற்கு பிழையான விளக்கம் கொடுப்பதாகும். 1956ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனி சிங்களச் சட்டத்தை ஆரம்பமாக எடுத்துக் கொண்டால் இனப்பிரச்சனையின் 50 ஆண்டு சரித்திரத்தில் முதல் தடவையாக சிங்கள மக்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை ஆதரிக்கத் தொடங்கி உள்ளனர். இதில் ஆச்சரியம் என்னவெனில் சுதந்திரம் கிடைத்த பின் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு அரசியல் கட்சிகள்தான் இத் தீர்வை முன் வைக்கின்றன. இனப்பிரச்சனை தீர்விற்கு சமஷ்டி முறையை முன்வைப்பதாக ஸ்ரீலசுக தனது வருடாந்த மாநாடொன்றில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதேபோல் ஐ.தே.க அதே தீர்வை ஜனாதிபதி தேர்தலின் போது தனது வேட்பாளர் மூலம் முன்வைத்துள் ளது. சமஷ்டி முறையை ஆதரித்து பாராளுமன்றத்தினுள் எதிர்கட்சி, ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேச ஆரம்பித்து விட்டனர். பெருமளவில் கல்விமான்களும், எழுத்தாளர்களும் இந் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர். இது தவிர பல அரசியல் கட்சித் தலைவர்கள் பல்வேறு மத பீடாதிபதிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறே சிந்திக்கின்றனர். சிங்கள பொதுமக்கள் எப்படியும் சமாதானத்தை கொண்டு வர விரும்புகின்றனர். அவர்கள் இன,மத, வேறுபாடற்று சகலருக்கும் சம உரிமையை கோரி நிற்கின்றனர். தம் மதம் மீது பற்றுக்கொண்ட

பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்த்தவர்கள், இஸ்லாமியர்கள், ஏனைய மதத்தினர் தத்தமது மத கோட்பாடுகளுக்கமைய அதே நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். தமிழ் மக்கள் தமது பங்காகவும் நன்நோக்கோடும் 30 ஆண்டு காலமாக கோரி வந்த பிரிவினையை கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி தீர்வை ஏற்கத் தயாராக உள்ளனர்.தமிழர்கள் இன்னுமொருபடி இறங்கி, சமஷ்டி பிரிவினைக்கு வழிகோலும் எனக் கூறும் சில சிங்கள மக்களுடைய பீதியை போக்க இந்திய முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்கத் தயாராக உள்ளனர். பிரிவினைக்கு எதிரான இந்திய அரசின் உத்தரவாதத்தோடு சகல இன மக்களுக்கும் சம உரிமை வழங்கும் சட்டங்களோடும் நாடு என்றைக்கும் பிரிந்து தனிநாடு அமையுமென்ற பேச்சுக்கே ஒரு போதும் இடமில்லை.

விடுதலைப் புலிகளுடைய சிந்தனை காலத் திற்கு ஏற்றதல்ல. அந்த துக்ககரமான 1983 ஜுலை 23ம் திகதி யாழப்பாணத்தில் திட்டமிட்டு 13 இராணுவ வீரர்களை கொலை செய்தமை அன்று பாதி முடிவடைந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டை குழப்பவும், ஓர் இனக்கலவரத்தை தூண்டுவதற்காகவுமேயாகும். அந்த இனக் கலவரத்தின்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சொத்தழிவும், உயிர் சேதமும் இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் நடக்காததாகும். குண்டர்கள் மூலமாக தாம் நினைத்ததை விடுதலைப் புலிகள் சாதித்து விட்டனர். சிங்கள மக்கள் மத்தியில் வாழந்த தமிழ் மக்கள் பெரும் எளவில் தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கிறகு இடம் பெயர்ந்தனர். மலையகத்தைச் சேர்ந்த பல தமிழர்கள்கூட வடக்கு கிழக்கில் பல தமிழ் பகுதிகளில் தீஞ்சம் புகுந்தனர். இருப்பினும் பல லட்சக்கணக்கான சிங்கள மக்கள வாழும் பகுதிகளில் அமைதியாக வாழ்ந்த தமிழ் மக்களின் உயிர்களை காப்பாற்றிய பெருமை சிங்கள, முஸ்லீம் மக்களுக்கே உரிதாகும்.

உலகில் எப்பகுதியிலும் சில கருங்காலிகள் இருப்பதற்கமைய சிங்கள மக்களைப் பற்றிய விடுதலைப்புலிகளின் கருத்து முற்றிலும் பிழையானதாகும். நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொது மக்களை கொன்று ஆண்கள்,பெண்கள் குழந்தைகள் உட்பட யாத்திரிகர்கள், விடுமுறையில் செல்லும் இராணுவத்தினர்,கடற்படையினர் பலரை கொன்று அதன் மூலமாக ஒரு இனக்கலவரத்தை தூண்ட விடுதலைப்புலிகள் முயற்சி எடுத்தும் நாட்டின் எப்பகுதியிலும் சிங்களவர்களால் ஒரு தமிழருக்குத் தானும் தீங்கிழைக்கப்படவில்லை. சிங்கள மக்கள் விடுதலைப் புலிகளின் பொறிக்குள் இனி எப்போதும் விழத் தயாராக இல்லை என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இன்று தமிழர்கள் விடுதலைப் புலிகளிலும் பார்க்க சிங்களவர்கள் மீது கூடுதல் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆகவே தான் பெருந்தொகையான தமிழ்மக்கள் இன்று வடகிழக்கில் இருந்து தாம் பரம்பரையாக வாழ்ந்த வீடுகளை விட்டு தென்னிலங்கைக்கு வந்து சிங்கள, இஸ்லாமிய மக்கள் மத்தியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

எவரேனும் தென்னாபிரிக்க மக்களுடைய போராட்டத்தை விடுதலைப் புலிகளுடைய போராட்டத்துடன் சமப்படுத்த முயல்வார்களேயானால் அது பெரும் தவறாகும். ஒரே நோக்கத்தோடு போராடும் பல்வேறு குழுக்களுடன் இணைந்து செயற்பட விடுதலைப்புலிகள் என்றும் தயாராக இருக்கவில்லை. ஒரே நோக்கோடு செயற்பட்ட பல குழுக்களை அழிப்பதிலேயே அவர்கள் ஈடுபட்டிருந்தனர். பிற குழுக்களின் ஆதரவாளர்களைக் கூட அவர்கள் சுட்டுக் கொன்றது மட்டுமல்ல தொடர்ந்து தினமும் அவர்களை அழிப்பதிலேயே ஈடுபட்டுள்ளனர். மிதவாதத் தலைவர்களையும் புத்தி ஜீவிகளையும் படுகொலை செய்த புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே என முட்டாள்தனமாக கூறி வருகின்றனர். அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்த மக்களின் உரிமைகளை அவர்கள் பறித் தெடுத்துள்ளனர். அவர்களின் கீழ் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை எந்த அரசின் கீழும் இழக்கவில்லை. சுருங்கக் கூறின் தமிழ் மக்களுக்கு இன்றைக்கு வேண்டியதெல்லாம் தமது விடுதலைக்காக போராடுவதாக கூறியவர் களிடமிருந்து தம்மை விடுவிப்பதே. உயிரழிவோ சொத்தழிவோ இன்றி தம்மை விடுவிக்கக் கூடிய ஒரு நட்பு இராணுவத்திற்கு சகல ஒத்துழைப்பையும் வழங்க அவர்கள் தயாராக உள்ளார்கள்.

விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் தென் ஆபிரிக்க மக்களின் அனுபவத்திலிருந்து கற்க வேண்டிய விடயங்கள் பலவுண்டு. விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட்டு அவசிய மேற்படின் அரசின் பாதுகாப்பை பெற்று தாம் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டை கைவிட்டு பல்வேறு தமிழ், இஸ்லாமிய குழுக்களுடன் ஒன்று சேர்ந்து அரசுடன் ஒரு நியாயமான தீவை எட்டுவதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

அரசும் தன் பங்காக மக்களுடைய ஆதரவை திரட்டி ஓர் நிரந்தரத் தீவை முன்வைக்க வேண்டும். சமஷ்டி ஆட்சி முறை நாட்டின் பிரிவினைக்கு வழிகோலும் என்ற அச்சத்தை அரசே போக்க வேண்டும். எனது ஆலோசனை யாகிய இந்திய முறையிலான அதிகாரப்பகிர்வை இலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் ஏற்றுள்ளனர். பாக்குத் தொடுவாய்க்கு அப்பால் உள்ள 600 இலட்சம் தமிழ் மக்களுடைய ஆதங்கம் புறக்கணிக்கக்கூடிய ஒன்றல்ல. எமது அயல் நாடாகிய தமிழ் நாட்டில் வாழும் ஒரு பகுதி மக்கள் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுகின்றார்கள் என பெரிதாக நம்புகின்றனர். இலங்கை வாழ் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்ற உண்மை அவர்களுக்குத் தெரியாது. அரசாங்கம் தானாக முன்வந்து சர்வதேச சமூகத்தால் நியாயமானதொன்றென ஏற்கக் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். கடந்த 50 ஆண்டு காலமாக ஒற்றையாட்சியின் கீழ் காணமுடியாத தீர்வை ஒற்றையாட்சியின் கீழ் தீர்க்க முயற்சிப்பது தமிழ் மக்களுக்குத் திருப்தியளிக்காது. ஆகவே தான் தமிழ் மக்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை விரும்புகின்ற அதேவேளை ஒரு மாற்று ஒழுங்காக இந்திய முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்கத் தயாராக உள்ளனர். ஒற்றையாட்சி முறையின் கீழ் எடுக்கப்படும் தீர்வு பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வாக அமையாது எதிர்காலத்தில் தொடர்ந்து அகிம்சை முறையிலான போராட்டத்துக்கே வழிவகுக்கும்.

பல வருட போராட்டத்தின் பின் தென்னாபிரிக்க மக்கள் இன்று தமது உண்மையான சுதந்திரத்தை கொண்டாடுவது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது. இலங்கை மக்களால் மிக அன்போடு மதிக்கப்படுகின்ற உங்களின் பெருந்தலைவர்கள் மாண்புமிகு நெல்சன் மண்டேலா அதிவணக்கத்திற்குரிய டெஸ்மன் டுட்டூ ஆகியோர் தலையிட்டு எமது பிரச்சினைக்கு தீர்வு காண உதவ வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட மாட்டாது என்று நம்புகின்றேன். இப் பணியை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் பல இலட்சக்கணக்கான இலங்கை மக்களுக்கு பெரும் நிம்மதியைக் கொடுப்பதோடு பல உயிர்களைக் காக்கவும் பெரிதாக விரும்பப்படுகின்ற அமைதியும், இயல்பு வாழ்வும் செழிப்பும் எம் நாட்டுக்கு திரும்ப உதவும் என நம்புகிறோம்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினை தீர்வுக்கு துணி..

1 ம் பக்கத் தொடர்ச்சி

கடைபிடிப்பவர் என்பதால் அனைவரும் சமம் என்றும் மற்றவர்களும் எம்மைப் போல் மனிதர்கள்தானே என்றும் நாட்டு மக்களுக்கு கூறுவதற்குள்ள தடை என்னவென்பதை கேட்க விரும்புகிறேன். நாம் எல்லோரும் சமம் என்பதையே நம் நாட்டின் சகல மதங்களும் போதிக்கின்றன. அதனையே சகல மதத் தலைவர்களும் போதிக்கின்றனர். போதிக்கவும் வேண்டும். ஒருவர் தனக்கு வேண்டியதை உங்களிடமிருந்து கேட்டுப் பெறும் உரிமையுண்டு ஆனால், மற்றவருக்கு நீங்கள் அதை கொடுக்கக்கூடாது என்று கூறும் உரிமை அவருக்கு இல்லை. இந்த நாட்டின் ஜனாதிபதியாகிய தாங்கள், நான் உட்பட இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதியே.

ஏழை மக்கள், ஒடுக்கப்பட்டவர்களுக்காக நீங்களும், நானும் அனுதாபப்படுகின்றோம். எமது நாட்டின் பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டுமென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாக இருக்கின்ற, முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமை வழங்கப்பட்டு உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை இனப்பிரச்சினையாகும். இனப்பிரச்சனைக்கொரு தீர்வு ஏற்படுமாயின் நாட்டின் சகல பிரச்சனைகளும் தாமாகவே தீர்ந்து நாடு செழிப்படையும்.

ஜூலை 1970 இல் அதாவது 37 ஆண்டுகளுக்கு முன் பாராளுமன்றம் புகுந்த ஒரு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினராகிய உங்களுக்கு இனப்பிரச்சனை சம்பந்தமாக கடந்த காலத்தில் நடந்தவை பற்றி தெரியாமல் இருக்க முடியாது. 1956ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்கள சட்டத்தை மைல்கல்லாக வைப்பின் 1957ம் ஆண்டு காலஞ்சென்ற கௌரவ எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்களும் காலஞ்சென்ற கௌரவ எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களும் செய்து கொண்ட பண்டா–செல்வா ஒப்பந்தம் கண்டி தலதாமாளிகாவிற்கு ஆட்சேபனை ஊர்வலம் மேற்கொண்டமையால் ரத்தானது. அதன்பின் 1965ம் ஆண்டு காலஞ்சென்ற கௌரவ டட்லி சேனநாயக்காவும் காலஞ்சென்ற கௌரவ எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோர் செய்து கொண்ட டட்லி-செல்வா ஒப்பந்தம்கூட கட்சிக்குள்ளும் வெளியிலும் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அமுல்படுத்த முடியாது போய்விட்டது. ஒப்பந்தத்தை அமுல்படுத்த தவறியதால் 1969ம் ஆண்டு நான்கு ஆண்டுவரை அரசுக்கு கொடுத்துவந்த ஆதரவை தமிழரசு கட்சி வாபஸ் பெற்றுக் கொண்டது. இனப்பிரச்சனைக்கு அப்போதே 14 வயதாகிவிட்டது.

அதன்பின் 1970ம் ஆண்டு மக்கள் கூட்டணி மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளோடு ஆட்சியை கைப்பற்றியது. இதே வருடம்தான் நாம் இருவரும் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானோம். 1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல்யாப்பு சட்டம் நிலைமையை மோசமடையச் செய்தது. பழைய அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு ஒரேயொரு பாதுகாப்பாக இருந்த 29 வது சரத்தை ஒத்த பாதுகாப்பு இப் புதிய அரசியல் சாசனத்தில் இடம்பெறவில்லை. 1977ம் ஆண்டு இனப்பிரச்சனையை தீர்ப்பதற்காக வாக்குறுதியளித்து ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் பதவிக்கு வந்தவேளை இனப்பிரச்சனைக்கு 20 வயதாகிவிட்டது. ஜே.ஆர். அவர்களுக்கு ஐந்தில் நான்கு பங்கு உறுப்பினர்களுடன் மக்கள் பிரமாண்டமான ஆணையை வழங்கினர். தன் கட்சியை சேர்ந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களுடைய ராஜினாமா கடிதங்களை பெற்று வைத்திருந்த ஜே.ஆர். அவர்கள் அக்கடிதங்களை சமர்ப்பிக்கப் போவதாக மிரட்டிக்கூட இனப்பிரச்சனையை தீர்த்து வைத்திருக்கலாம். ஆனால், சகல வாய்ப்புக்கள் இருந்தும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவருக்கு இருக்கவில்லை. மாவட்ட அபிவிருத்திச் சபைகளையே அவர் தனது தீர்வாக முன் வைத்தார். அதற்கு அதிகாரம் வழங்குவதில் தன் கஞ்சத்தனத்தை கடுமையாக கடைபிடித்தார். மாவட்ட அபிவிருத்திச் சபை என்ற பெயரில் அபிவிருத்தி என்ற சொல்லை விட்டு மாவட்டசபை என அழைக்குமாறு நாம் வற்புறுத்திக் கேட்டும் அவர் மசியவில்லை. மாவட்ட அபிவிருத்திசபை திட்டம் தோல்வியிலேயே முடிந்தது. அரசியல் சாசனத்தின் ஆறாவது திருத்தத்தின் மூலம் மிதவாதிகளிடமிருந்த தமிழ் மக்களின் தலைமையை பறித்தெடுத்து ஆயுதக் குழுக்களிடம் கையளித்தார். அவரே சமாதான காலத்தில் உலகில் வேறு எங்கும் அமுல்படுத்தப்படாத பாராளுமன்றத்தின் கால எல்லையை பொதுஜன வாக்கெடுப்பு மூலம் நீடித்து சரித்திரம் படைத்தார். அவர் ஆயுதக்குழுக்கள் மட்டும் வளர்வதற்கு வழிவகுத்தார். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்தியதோடு அவர் இளைப்பாறிக்கொண்டு நாட்டு பிரச்சனை தீர்வுக்கு சமஷ்டி முறையே சிறந்ததென திருவாய் மலர்ந்தருளினார். தொகுதிவாரியாகப் போட்டியிட்டு ஐந்தில் நான்கு ஸ்தானங்களைப் பெற்று ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். அவர்கள் என்றும் எவராலும் மூன்றில் இரண்டு ஸ்தானங்களை பிடிக்க முடியாத விகிதாசார தேர்தல் முறையை உருவாக்கி பிரச்சனையை தீர்க்க முடியாதவாறு நிலைமையை உருவாக்கிச் சென்றார்.

இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு இனப்பிரச்சனையின் நீண்டகால வரலாறு தெரியாது. கடந்த சில ஆண்டுகளாக இருபக்கத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இன்றைய நிலைமைக்கு ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி –செல்வா ஒப்பந்தம் ஆகியவை அமுல்படுத்த தவறியதற்கு கட்சிகளின் கடந்தகால தலைமை மீது குற்றஞ் சுமத்தியுள்ளனர். அநேகர் சமஷ்டி முறையையும், சிலர் இந்திய முறையையும் தீர்வுக்கு ஆதரவாக பேசியுள்ளனர். இந்த நிலைமை ஏற்பட்டதன் பின் இனப்பிரச்சனை தீர்வுக்கு மாவட்டசபை பிரேரணையை எவ்வாறு ஏற்க முடியும்? எனது அபிப்பிராயப்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்த ஆலோசனை எதிர்பார்த்ததற்கு மாறுபட்ட பலனையே தருவதோடு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் அவர்களது நிலைப்பாட்டை பலப்படுத்தவே உதவும். சிறுபிள்ளைத்தனமாக அண்மைக்காலத்தில் அவர்கள் காட்டிய வானவேடிக்கையாலும் அதனைத் தொடர்ந்து இராணுவத்தினரின் மரணத்தினாலும், பொது மக்களுக்கு பீதியை ஏற்படுத்தியதாலும் புலிகள் தாம் இழந்த பெயரை இதன் மூலம் மீளப்பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் முதலாவதாக தீர்வுத் திட்டத்தை முன் வைப்பதில் அரசு காலதாமதம் ஏற்படுத்தியதாலும், இரண்டாவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள ஆலோசனையினாலும் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளது. ஒஸ்லோ பிரகடனத்தில் கூறப்பட்டதற்கு அமையக்கூடிய ஒரு தீர்வையே சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது. அத்தகைய ஒரு உடன்பாட்டுக்கு முரணாக அரசு செயல்பட முடியாது.

ஆண்டவனுக்குப்பின் அடுத்ததாக நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவர் தாங்களே. ஜனாதிபதி தேர்தல் முடிந்தவுடன் எத்தீர்விலும் காலதாமதம் செய்வது பாதகமாகவே அமைவது இந்த நாட்டின் பாரம்பரியம் எனத் தாங்களை முன்னரே எச்சரித்துள்ளேன். தாங்கள் பதவியேற்று மூன்று தொடக்கம் ஆறு மாதத்திற்குள் ஒரு தீர்வை முன் வைத்திருக்க வேண்டும். தாங்கள் தெரிவாகிய நேரத்தில், இன்று உருவாகியுள்ள சங்கடங்கள் உருவாகவில்லை. மக்கள் ஞாபகசக்தி குறைந்தவர்கள் என்பதை அறிவீர்கள். தனிச்சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின் நடந்த சம்பவங்களை நாங்கள் மக்களுக்கு ஞாபகமூட்ட வேண்டும். சிறுபான்மை மக்களோடு செய்த ஒப்பந்தங்கள், கொடுத்த வாக்குறுதிகள், அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள், பயங்கரவாதிகளால் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட பாதிப்புக்கள், எவ்வாறு புலிகள் தமிழ் தலைவர்கள், அறிவாளிகள், கல்விமான்கள், அதிபர்கள், சட்டவல்லுனர்கள் போன்றவர்களை கொலை செய்து தமிழ் மக்களை சு.ப.தமிழ்ச்செல்வனிடமும், புலிகளின் முகவர்களாக செயற்படும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் தஞ்சம் புக வைத்தமை, எவ்வாறு தமிழ் மக்கள் புலிகளின் கீழ் அடிமைகளாக வாழ்கின்றார்கள், ஏன் சிங்கள மக்கள் அவர்கள் மீது அனுதாபம் கொண்டு அவர்களை விடுவிக்கக் கூடாதென்றும் சுயலாபங்களை கைவிட்டு சகல மக்களும் ஒருவரையொருவர் மதித்து, நேசித்து சம உரிமையுடன் வாழக்கூடிய ஒரு புதிய சமுதாயத்தை கட்டியெழுப்ப ஏன் உதவக்கூடாது என்றும் அவர்களை கேட்க வேண்டும்.

இலங்கை சரித்திரத்தின் ஒரு முக்கியமான காலகட்டத்தில் நீங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். எமது நாட்டுக்கு அவசியம் தேவைப்படுவது திருப்தியுடன் வாழும் சமுதாயமே. இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு முறையான ஆணையை மக்கள் உங்களுக்கு தந்துள்ளனர். யாருடனும் உங்களுக்கு சில உடன்படிக்கைகள் ஏற்பட்டிருந்தாலும் கூட இன்றைய நிலைமையை மறுபரிசீலனை செய்து சிறுபான்மை சமூகத்துக்கு மட்டுமன்றி சர்வதேச சமூகத்துக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நியாயமான தீர்வை முன்வைப்பீர்களேயானால் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தால் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை ஏற்றாக வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவார்களேயானால் அது அவர்களுக்கு பாதகமாகவே அமையும். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய வருடாந்த மாநாட்டில் சமஷ்டி முறையிலான தீர்வையே முன்வைக்க வேண்டுமென பிரேரணை நிறைவேற்றப்பட்டது. நாடு சமஷ்டி தீர்வை ஏற்க தயாராக உள்ளதென உங்களுக்கு முன் பதவிவகித்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பிரகடனப்படுத்தியதை நாடும், சர்வதேச சமூகமும் நன்கு அறியும். இது தவிர சமஷ்டி தீர்வை ஆதரித்து 49.7 வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர். வடபகுதி மக்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்காது தடுக்கப்பட்டனர் என்ற உண்மை கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய விடயமாகும். மேலும் இடதுசாரி கட்சிகள் புலிகளின் முகவர்களாக செயற்படும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த தமிழ், முஸ்லீம் கட்சிகள் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு வாக்களித்துள்ளனரே அன்றி 50 ஆண்டுகளாக தீர்வு காண முடியாத ஒற்றையாட்சி முறைக்கு அல்ல. இனப்பிரச்சனையை பொறுத்தவரையில் சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண மக்கள் உங்களுக்கு பிரமாண்டமான ஆணையை தந்துள்ளனர். சமஷ்டி முறை ஒற்றையாட்சி முறை சில பகுதியினருக்கு கசப்பாக இருப்பின் இந்திய மாதிரியிலான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பின் அது பல்வேறுபட்ட மக்களுக்கு சமஷ்டி முறைக்கு அல்லது ஒற்றையாட்சி முறைக்கு பதிலாக ஏற்புடையதாக இருக்கும். நாட்டின் உள்ளும், வெளியிலும் எனது பிரேரணையை பலருடன் கலந்துரையாடியிருக்கிறேன். அதிவணக்கத்துக்குரிய மகாநாயக்கர்கள், வணக்கத்துக்குரிய மதகுருமார்கள், கௌரவ அமைச்சர்கள், ஆளும் கட்சி, எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், உள் நாட்டிலும், பிற நாடுகளிலும் உள்ள எமது நாட்டு முக்கியஸ்தர்கள், பல்வேறு ராஜதந்திரிகளுடனும் ஆலோசித்த போது எவரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எனது ஆலோசனை பல்வேறு கருத்தரங்குகளில் விவாதிக்கப்பட்டதோடு பிரபல ஊடகவியலாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள் ஆகியோரின் எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டதோடு உள்ளூர் தேசிய பத்திரிகைகள் தலையங்கங்களும் தீட்டியுள்ளன. என்னால் உறுதியாக கூறக்கூடியது யாதெனில் தமிழ் பேசும் மக்கள் பிரிவினை கோரிக்கையை கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு சமஷ்டி அடிப்படையிலான அல்லது இந்திய முறையிலானவொரு தீர்வையே ஏற்கத் தயாராக உள்ளனர். நாட்டுப் பிரிவினையை பற்றி பேசாது தடுக்கக் கூடிய வகையில் எத்தகைய கடும் சட்டங்களை அரசு இயற்றினாலும் அதை நாம் வரவேற்போம். பல சிங்கள முக்கியஸ்தர்கள் தாம் நாட்டுப் பிரிவினையை மட்டும் எதிர்ப்பதாகவே கூறியுள்ளனர். மிக முக்கியமான சிலர் நாட்டை பிரிக்காது எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறியுள்ளனர்.

இந்திய மத்திய அரசும் மாநில அரசும் எனது பிரேரணையில் அக்கறை காட்டாதமை தூரதிஷ்டமானதே. தமிழ், முஸ்லீம் மக்களுடைய பிரச்சனை தீர்வு சம்பந்தமாக அக்கறை எடுக்க வேண்டும் என்று தமிழ் நாட்டு அரசு டெல்லியை வற்புறுத்தி இருந்தால் பிரிவினையை எதிர்த்து ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதை வரவேற்கும் இந்திய மத்திய அரசு மிக மகிழ்ச்சியுடன் செயற்பட்டிருக்கும். இந்திய கடற்படையும், தமிழ் நாட்டு பொலிசாரும் குண்டு தயாரிக்கும் மூலப்பொருட்களை இலங்கைக்கு கடத்தி வந்த புலிகளையும் அவர்களுக்கு ஆதரவான தமிழகத்தவர்களையும் கைது செய்து புலிகளின் நடவடிக்கையை கட்டுப்படுத்தி பயங்கர விளைவுகள் இலங்கையில் ஏற்படாமல் தடுத்தமையினால் அதை பாராட்டும் வகையில் இனப்பிரச்சனை தீர்வுக்கு அரசு வைக்கும் பிரேரணை சம்பந்தமாக இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் கூற வேண்டிய தார்மீக கடமை இலங்கைக்கு உண்டு. இந்தியாவும், இலங்கையும் ஒன்றோடொன்று முரண்பட முடியாதென மகாத்மாகாந்தி என்றோ கூறியதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

தயவு செய்து நாம் செய்யும் சிறு தவறுகளால் சர்வதேச சமூகம் புலிகள் மீது கடைபிடிக்கும் கடுமையான போக்கை தளரவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். வைக்க வேண்டிய இடத்தில் புலிகளை வைக்க வேண்டுமானால் எமக்கு எப்பொழுதும் இந்தியாவினுடைய விசேடமாக தமிழகத்தினுடைய உதவி வேண்டும். அண்மையில் நான் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டபோது 27 ஆண்டுகள் தொடர்ந்து வெள்ளையர்களால் சிறையில் வைக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க தலைவர் மேன்மை தங்கிய நெல்சன் மண்டேலா மீது அந்நாட்டு மக்கள் வைத்திருக்கும் அன்பையும், பெருமதிப்பையும் கண்டு பெரிதாக வியந்தேன். நீண்டகாலம் தன்னை சிறையில் வைத்திருந்த வெள்ளை ஆட்சியாளர் மீது அவர் மனஸ்தாபம் கொண்டிருக்கவில்லை. இன ஒதுக்கல் சட்டங்களால் எவரின் கற்பனைக்கும் எட்டாத அளவு துன்பங்களை உள்ளூர் வாசிகளாகிய கறுப்பினத்தவர்கள் அனுபவித்தனர். எவ்வளவு கொடூரமாக அவர்கள் நடத்தப்பட்டார்கள் என்பதை அறிய வேண்டுமானால் "இன ஒதுக்கீடு நூதனசாலை" க்கு விஜயம் செய்தால் அறிய முடியும். இருந்தும் தங்கள் தலைவரின் ஒரு சொல்லை மந்திரமாக ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு தென்னாபிரிக்கரும் வெள்ளையர் மீதுள்ள கசப்புணர்வுகளை விடுத்து இன, நிற, பேதம் பாராது ஒருவருக்கொருவர் கோபம் பாராட்டாது மிக அமைதியாக வாழ்கின்றார்கள்.

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி மேன்மை தங்கிய நெல்சன் மண்டேலாவிடமிருந்து நீங்கள் ஓர் பாடம் கற்க வேண்டும். கறுப்பின மக்கள் வெள்ளையின மக்கள் மீது கொண்டிருந்த கசப்புணர்வை விட்டுவிட வேண்டும் என அவர் கூறிய வார்த்தையை ஒரு மந்திரமாக அம் மக்கள் ஏற்றுக் கொண்டனர். இதைத்தான் நீங்களும் செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன். தமிழ், முஸ்லீம் சிறுபான்மையினருடைய அபிலாசைகளுக்கு அமைய நீங்கள் ஓர் அரசியல் சாசனத்தை உருவாக்கி அல்லது உருவாக்க வைத்து அதை நாட்டு மக்கள் முன் சமர்ப்பித்து அதை எல்லா மக்களும் ஏன் ஏற்க வேண்டும் என கூற வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகராகிய காலஞ்சென்ற கௌரவ எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்கள் நாட்டுக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே சமஷ்டி ஆட்சி முறையே பொருத்தமானது என விரும்பி இருந்தார்.

சரியாக சிந்திக்கின்ற, கடவுளை பயபக்தியோடு நேசிக்கின்ற சிங்கள மக்கள் உங்களுக்கு முழு ஆதரவு தருவார்கள் என உறுதியளிக்கிறேன். அத்தோடு இலங்கையின் வரலாற்றில் இலங்கையின் நெல்சன் மண்டேலா என உங்களை சரித்திரம் கூறும். எல்லா மனிதரும் சமமாகவும், ஒருவரையொருவர் நேசித்து, மதித்து வழும் ஒரு புதிய இலங்கை உருவாகும். நம்பமுடியாத வகையில் இதுதான் இன்று தென்னாபிரிக்காவில் நடக்கிறது. அதுபற்றி தென்னாபிரிக்கர்கள் பெருமையடைகிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் புலிகள் யுத்தத்தை நிறுத்தி ஆயுதங்களை கைவிட வற்புறுத்தப்படுவார்கள். ஆண்டவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்கு கிடைப்பதோடு யுத்தத்தால் விதவைகளாகவும், அனாதைகளாகவும் ஆக்கப்பட்டவர்கள் உங்களை ஆசீர்வதிப்பர். இதன் பின்பும் புலிகள் வழிக்குவர மறுப்பார்களேயானால் சர்வதேச சமூகம் உரிய முறையில் அவர்களை கவனித்துக் கொள்ளும். முழு நாடும் உங்களுக்கு ஆதரவாக இருந்து செயல்படும்.

மிக்க மதிப்புடன்

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி

அரசியல் தீர்வுகாண முன்வர வேண்டும்

யுத்தத்தின் மூலம் தீர்வுகாணும் எண்ணத்தைக் கைவிட்டு, அரசியல் தீர்வொன்றின் மூலம் சமாதானத்தை அடைய முயற்சிக்குமாறு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாட்டில் வாழும் தமிழ், சிங்கள், முஸ்லீம் மக்கள் முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களுடனான சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரைச் சந்தித்து இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளதுடன், சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸவிதாரணவையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு தலைவர்க

1 ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும். இந்தியாவில் எக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எவர் பிரதமராக வந்தாலும் இலங்கையில் தமிழீழம் அமைப்பது சாத்தியமல்லவென வலியுறுத்தி வந்துள்ளனர். ஆகவே தமிழ் நாட்டுத் தலைவர்கள் இலங்கையுடன் இத்தகைய தீர்வு பற்றி பேசுவார்களாக இருந்தால் அது பயனுள்ளதாக இருக்கும்.

விடுதலைப் புலிகள் அப்பாவி இலங்கைத் தமிழர்கள் மீது கொடூரமான முறையில் நடந்து அவர்களை கொடுமைப்படுத்தி அடிமைகள் போல் நடத்தி வருகின்றனர். இதனால் தமிழ் மக்கள் நிரந்தர பயத்துடனும் பீதியுடனும் வாழ்கின்றனர். எனவே தமிழ் மக்களைப் பற்றி பேசுகின்ற அருகதை விடுதலைப் புலிகளுக்கு அற்றுப் போய்விட்டது. மக்கள் பெருமளவு இடம்பெயர்ந்து வாழ்வதற்கு முக்கிய காரணம் விடுதலைப்புலிகள் அவர்களை படுமோசமான முறையில் நடத்தியமையே. ஆபத்து நிறைந்த கப்பல் பயணத்தை மேற்கொண்டு இந்தியா வருவதிலும் பார்க்க விடுதலைப்புலிகளின் பிரதேசத்துக்குள் மிகவும் இலகுவாக இருந்தும் கூட அவர்களில் வசதியானோர் வெளி நாடுகளுக்கும், சிலர் இந்தியாவுக்கும் வருகின்றார்கள். இந்தியாவுக்கு செல்கின்றவர்கள் அத்தனைபேரும் அகதிகள் அல்ல. அவர்கள் தங்களுடைய பிள்ளைகளை புலிகளின் சிறுவர் படையணியில் சேராது தடுப்பதற்கும், விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப்படும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், ஹர்த்தால்கள் போன்றவற்றால் இயல்பு வாழ்க்கை சீரழிவதோடு மாணவர்களின் படிப்பும் சீரழிவதாலும் தங்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இந்தியா செல்கின்றனர். தமிழீழம் சாத்தியமற்றதென்பதை தமிழ் மக்கள் உணர்ந்துகொண்டுள்ளனர். இதனை சாதிக்க முடியாதென்பதை விடுதலைப் புலிகளும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

இந்தியா போன்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் பிரிவினையை எதிர்க்கின்றன. உலகில் எந்த ஒரு நாடும்

இலங்கையில் பிரிவினை ஏற்படுவதை விரும்பவில்லை. ஓஸ்லோ மற்றும் டோக்கியோ ஆகிய உடன்படிக்கையின்படி சமஷ்டி முறையே தீர்வாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு முழுக்க உண்டு. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இலங்கை அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிங்களத் தலைவர்கள் தமிழ் தலைவர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அத்தனையும் பல்வேறு கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக ரத்துச் செய்யப்பட்டன. பண்டா—செல்வா ஒப்பந்தம், டட்லி—செல்வா ஒப்பந்தம், இந்திய இலங்கை ஒப்பந்தம் அத்தனைக்கும் ஏற்பட்ட கதி அனைவரும் அறிந்ததே. இன்று நிலைமை முற்றுமுழுதாக மாறுபட்டுள்ளது. பிரதான அரசியல் கட்சிகள் 50 ஆண்டுகாலமாக கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்று ஒவ்வொருவரும் சிறுபான்மை இனத்தவருக்கு ஏற்புடைய ஒரு நியாயமான தீர்வை விரும்புகின்றனர்.

50 ஆண்டுகாலமாக சமஷ்டி பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற பீதி மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளமையால் சமஷ்டி என்ற வார்த்தை பலருக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒற்றையாட்சிக்குக் கீழ் 50 ஆண்டுகாலமாக பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாதபடியினால் இனியும் ஏற்படாது என்று பெரும்பாலானோர் நம்புகின்றனர். சமஷ்டி, ஒற்றையாட்சி ஆகியவற்றை எதிர்ப்பவர்கள் பலருடன் நான் பேசிய பொழுது பெரும்பாலானோர் இந்திய முறையை விரும்புவதை உணர்ந்தேன். அதனாலேயே என்னை இந்திய முறையை ஏற்குமாறு கோர வைத்தது. இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியா ஒரு இஸ்லாமியரை நாட்டின் தலைவராக ஏற்று பெரும் மதிப்பு கொடுத்து வருகிறது. இப் பதவியை முன்பும் இஸ்லாமியர்கள் வகித்துள்ளனர். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மிக்க மதிப்பை பெற்ற ஓர் சீக்கியர் நாட்டின் பிரதம மந்திரியாக விளங்குகின்றார். இத்தகைய பல முன்னுதாரணங்களை காட்டியே பலரை எனது ஆலோசனையை ஏற்க வைத்தேன். அத்தகைய முன்னுதாரணங்கள் எவையென கூறி ஒரு இந்தியன் இன்னுமொரு இந்தியனை அவருடைய இன, மத, மொழி ஆகியவற்றின் மூலம் அடையாளம் காணாது இந்தியனாகவே அடையாளம் காணும் இந்தியப் பெருமக்களுக்கு நான் அபகீர்த்தியை ஏற்படுத்த விரும்பவில்லை. வேற்றுமையில் ஒற்றுமை என்ற அடிப்படையிலேயே தமது அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டதென இந்தியர்கள் பெருமையடைகின்றனர்.

நாட்டின் உள்ளும் வெளியிலும் வாழும் பல துறையிலும் செயல்படுகின்ற இலங்கையர் என்னால் சிபாரிசு செய்யப்படும் இந்திய முறையிலான ஒரு அரசியல் சாசனத்தை மிகவும் பாராட்டுகின்றனர். இனப்பிரச்சினை தீர்வுக்கு எனது தீர்வே பல மட்டத்திலும் விவாதிக்கப்படுகின்றது. சமயத் தலைவர்கள் மத்தியில் பெருமளவு ஆதரவை பெற்றுள்ளது. அதிவணக்கத்துக்குரிய ஒரு சிங்கள பிஷப் எனது தீர்வு வேகமாக வலுப்பெறுகின்றது என்று பாராட்டியுள்ளார். அதேபோல பலர் வாழ்த்தியுள்ளனர். மகாசங்கத்தைச் சேர்ந்த மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளான அதிவணக்கத்துக்குரிய உடுகம சிறி புத்தரஹித்த தேரர் அவர்களும், அதிவணக்கத்துக்குரிய திபத்துவாவே சுமங்கள தேரர் அவர்களும் என்னுடன் கலந்தாலோசித்தபோது நாட்டை பிரிக்க கூடாது என்பதை மட்டுமே வலியுறுத்தினர். எனது பிரேரணை எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க உட்பட ஆளும் கட்சி, எதிர்கட்சி தலைவர்கள், முஸ்லீம் தலைவர்கள், பிரதம மந்திரி கௌரவ ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, பல அமைச்சர்கள், தற்போதைய ஜனாதிபதி மேன்மைதங்கிய மகிந்த ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா போன்ற முக்கிய பிரமுகர்களுடனும் கலந்துரையாடியுள்ளேன். பல இலங்கை சமூகத்தவர்களை சேர்ந்த குழுக்கள் பலவற்றுடனும் வெளிநாட்டில் பேசியுள்ளேன். எவரும் கருத்து வேறுபாடுகளை தெரிவிக்கவில்லை. சமஷ்டி முறையிலும் பார்க்க இந்திய முறையிலான தீர்வுக்கு பெருமளவு ஆதரவு காட்டப்படுகின்றது. இந்திய முறை மூலம் இலகுவாகவும், விரைவாகவும் தீர்வு காணப்பட முடியுமென்று பலதரப்பட்ட மக்களும் கருதுகின்றனர். எனது ஜே.வி.பி தோழர்களும், மதிப்பிற்குரிய ஜாதிக ஹெல உறுமய தலைவர்களும் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணக்கூடிய வகையில் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு ஆதரவு வழங்கி 70,000 இற்கு மேற்பட்ட உயிர்கள் பறிக்கப்பட்ட நிலையிலும் தொடர்ந்து உயிர்ப் பலிகளை நிறுத்தவும் உதவுவர்.

பாக்குத்தொடுவாய்க்கு அப்பாலுள்ள தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்நாடு மிகவும் விரும்புகின்றது. ஆகவே 23 ஆண்டுகாலமாக அம் மக்கள் அனுபவித்து வந்த சொல்லொணா துயரங்களை மனதில் கொண்டு விடுதலைப் புலிகள் இந்திய ஆட்சி முறையை ஏற்க தமிழ் நாடு அழுத்தம் கொடுக்க வேண்டும். தமிழ் மக்கள் இழந்த உரிமைகளில் ஜனநாயக உரிமை, அடிப்படை உரிமைகள், மனித உரிமை மீறல்கள் அடங்கும். இந்திய முறையிலான தீர்வை விடுதலைப் புலிகள் ஏற்பதாக பகிரங்கமாக கூறுவார்களேயானால் தீர்வு மிக அண்மித்துவிட்டது என்பது மட்டுமன்றி முழு நாட்டுக்கும் தீர்வு காணும் மனநிலை ஏற்படும்.

தமிழ்நாட்டவர்களுக்கும் ஏற்புடையதாகிய இந்திய முறையிலான தீர்வை [illegible] தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறும் 22 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரசை ஏன் கோரவில்லையென பலர் கேள்வி எழுப்பலாம். அவர்கள் மனித உரிமை மீறல்கள் பற்றியும் ஏ—9 வீதி திறப்பது பற்றியுமே பேசினர். பாராளுமன்ற உறுப்பினர் பதவி விடுதலைப் புலிகளின் முயற்சியால் அவர்களுக்கு கிடைத்தமையால் அவர்கள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாகவே பேசுகின்றார்களே அன்றி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பேசவில்லை என்பது துரதிஷ்டமானதாகும். விடுதலைப் புலிகளின் சண்டித்தனம், மிரட்டல், மோசடி ஆகியவையே அவர்களுக்கு வெற்றியை கொடுத்திருந்தும் அவர்கள் தாமே தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என கூறித்திரிகின்றனர். எனது குழு வேட்பாளர்கள் உட்பட வேறு எந்த வேட்பாளர்களையும் எதுவித தேர்தல் வேலைகளிலும் ஈடுபடவிடவில்லை. அரசியலில் ஈடுபட்டவர்கள் மட்டுமன்றி பெரும்பாலான தமிழ் மக்களும் வாக்களிப்பதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை. மோசடி மூலமே தேர்தல் நடைபெற்றது என்றும் வடகிழக்குக்கு புதிய தேர்தல் நடத்த வேண்டும் என்றும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் சிபாரிசு செய்திருந்தன.

டெல்லியில் திரு. ஆர். சம்பந்தன் தலைமையில் சென்ற த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பித்த அறிக்கை ஒருதலைபட்சமான பாராபட்சமான அறிக்கை. தமிழ் மக்களுக்கு புலிகளால் செய்யப்படும் கொடூர செயல்கள் பற்றி எதுவும் கூறவில்லை. இன்றும் புலிகளின் மனித உரிமை மீறல்கள் அரச படைகளின் மீறல்களுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு கூடுதலாகும் அண்மைக் காலமாக படையினர் மத்தியிலும் மீறல்கள் அதிகரித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. பல்வேறு இடங்களில் விடுதலைப் புலிகளால் ஏவப்படும் எறிகணை வீச்சுக்கள், கிளேமோர் குண்டுத்தாக்குதல்கள், கைக்குண்டுத் தாக்குதல்கள், பிஸ்டல் குழுவினரின் தாக்குதல்கள் காரணமாக பல இராணுவத்தினர் இறப்பதும் அப்பாவி மக்கள் பலர் இறப்பதும் காயப்படுவதும் தினமும் நடக்கின்ற சம்பவங்களாகும். இதுவே அரச படைகளை மனித உரிமை மீறல்களில் கூடுதலாக ஈடுபட வைக்க

புலிகள் படுகொலை செய்த சிங்கள கிராமவாசிகள்

லாம். அப்பாவி மக்களின் மரணங்களை கூட த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபிக்காதமை வருத்தத்துக்குரியதாகும்.

ஏ—9 பாதை மூடப்பட்டது சம்பந்தமாக கூறின் இப் பாதையே யாழ் குடாநாட்டை ஏனைய பகுதிகளுடன் இணைப்பதாகும். விடுதலைப் புலிகள் அப் பாதையில் வரி அறவிடுவதையும் ஆட்கள் கடத்துவதையும் முகமாலை சோதனைச் சாவடியை தாக்கமாட்டோம் என உறுதியளித்தால் பாதை திறப்பதற்கு மறுக்க அரசாங்கம் எதுவித காரணமும் கூற முடியாது. எட்டு கட்டை வரை அரச கட்டுப்பாட்டு பகுதிக்குள் ஊடுருவி தாக்கியதாலேயே பாதை மூடப்பட்டது. பல ஆண்டுகள் விடுதலைப் புலிகளால் மூடப்பட்டிருந்த இப் பாதை யுத்த நிறுத்தத்தின் பின்பே திறக்கப்பட்டது. அதற்கு முன்பு சொல்லமுடியாத துன்பங்களை மக்கள் அனுபவித்தனர். ஆறு, ஏழு மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளும் பிரயாணத்தை ரயில், கப்பல், [illegible] மணித்தி[illegible]

லங்கள் பிரயாணம் செய்யவேண்டிய நிலை அன்று ஏற்பட்டிருந்தது. சிப்பந்திகளோடு மேலும் 44 பயணிகள் பயணம் செய்த விமானத்தை சுட்டு வீழ்த்தினர். இன்று மூன்று வெவ்வேறு மாற்று ஒழுங்குகளை அரசு முன் வைத்தது.

1. வேறொரு தரைமார்க்கப் பாதை.
2. பல லொறிகளில் ஒரே நேரத்தில் பொருட்களை அனுப்புதல்.
3. கப்பல் மூலம் பொருட்களை அனுப்புதல்.

இம் மூன்று ஒழுங்குகளையும் தகுந்த காரணமின்றி விடுதலைப் புலிகள் நிராகரித்ததோடு கடல் பயணத்துக்கு துணை போக வேண்டாமென்று சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துக்கு எச்சரிக்கை விட்டிருந்தது. அப்படியிருந்தும் சில சிங்கள மாலுமிகள் தமக்கு ஏற்படும் அபாயத்தையும் பொருட்படுத்தாமல் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச்சென்றனர். விடுதலைப் புலிகள் அரசியல் பணிகளுக்கு மட்டுமே யாழ்ப்பாணத்துக்கு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அரசியல் பணிகளை விடுத்து அரச ஊழியர்களை மிரட்டி அரச நிர்வாகத்தை கைப்பற்றுவதிலேயே ஈடுபட்டிருந்தனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இல்லாத பல்வேறு வரிகளை விதித்து தினமும் பலகோடி ரூபாய்களை சம்பாதித்தனர். இந்த வீதியால் அவர்களால் கடத்தப்பட்டவர்களின் கதி என்னவென்று தெரியாது. பாதை மூடப்பட்டதால் மக்கள் துன்பப்படுவதும் பொருட்களின் விலை பலம்டங்கு கூடியதும் உணவு தட்டுப்பாடு இருப்பதும் உண்மையே. தனியார் துறையினர் யாழ்ப்பாணத்துக்கு பண்டங்கள் எடுத்துச் செல்வது புலிகளால் தடுக்கப்பட்டமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது. அவர்களின் அக்கறை முழுதும் வரி மூலம் பணம் சேர்ப்பதே.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் எமது மக்கள் படுகின்ற கஷ்டங்களை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தேன். அவர்கள் சகல உரிமைகளையும் இழந்து அடிமைகள் போல் வாழ்கின்றார்கள். அவர்களுடைய பிள்ளைகள் கடத்தப்படுவதைக்கூட முறைப்பாடு செய்ய முடியாது தவிக்கின்றனர். அதேளை விடுதலைப் புலிகளது தலைவர்களின் பிள்ளைகள் போராளிகளாக சேர்க்கப்படுவதில்லை என்பதற்கு ஆதாரம் உண்டு. அதற்குப் பதிலாக அவர்கள் வெளிநாடுகளில் கல்வி கற்று வருகின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் வாழ்கின்ற மக்கள் மௌனமாக கண்ணீர் விடுகின்றனர். புலிகளின் இரும்புத்திரைக்குப் பின்னால் நடப்பவற்றை யாரும் அறிய மாட்டார்கள். த.தே.கூ பாஉக்கள் இதுபற்றி நன்கு அறிந்திருந்தும் புலிகளின் பிரதிநிதிகளாக மட்டும் செயல்படுவதால் மௌனம் சாதிக்கின்றனர். புலிகளின் செயற்பாடுகள் வெளி உலகுக்கு தெரியமாட்டாது. ஆனால் அரச படைகளின் செயற்பாடுகள் அடுத்த நிமிடமே மிகைப்படுத்தப்பட்ட செய்தியாக அவர்களின் இணையத்தளங்களில் வெளிவந்து விடுகின்றது. உதாரணமாகக் கூறின் தமிழ்நாட்டு மக்களும் பிறநாடுகள் பலவற்றில் உள்ளவர்களும் முல்லைத்தீவு செஞ்சோலையில் இறந்த 52 பேரும் அனாதைகள் என நம்புகின்றனர். ஆனால் உண்மை என்னவெனில் அத்தனை பெண் பிள்ளைகளும் நான் 14 ஆண்டுகள் பிரதிநிதித்துவப் படுத்திய கிளிநொச்சித் தொகுதியின் பல்வேறு பாடசாலைகளை சேர்ந்த உயர் வகுப்பு மாணவிகளாகும்.

புலிகள் தடுப்பு முகாம்கள், இருட்டறைகள், சித்திரவதை முகாம்கள் பலவற்றை வெளி உலகுக்குத் தெரியாது தமது இரும்புத்திரைக்குப் பின்னால் நடத்தி வருகின்றனர். அத்துடன் பலாத்காரமாக சிறுவர்களை போராளிகளாகச் சேர்த்தல், ஆட் கடத்தல் மற்றும் கொலைகள் தாராளமாக நடைபெறுகின்றது. புலிகளின் பிரதேசத்துக்கு உள்ளே இப்படி பல விடயங்கள் நடைபெறுகின்றன. மக்கள் அடிமைகள் போல் வாழ்கின்றனர். சிங்கள ஆதிக்கத்தை பற்றி பேசுவதற்கு முன்பு புலிகளிடமிருந்து தமிழ் மக்கள் மீட்கப்பட வேண்டும். சில விசேட காரணங்களுக்காக தகுந்த பொறுப்பு கொடுத்தால் மட்டும் ஒருவர் வெளியில் சென்றுவர அனுமதிக்கப்படுவர்.

தமிழ் நாட்டில் புலிகளின் செயற்பாடு பற்றி பிழையான தகவல்கள் கிடைக்கின்றமையால் புலிகளுக்கு எதிராக யாரும் ஒரு வார்த்தை பேசுவதில்லை. அரசாங்கத்தால் வழங்கப்படும் அத்தனை வசதிகளையும் வைத்து அவர்கள் அங்கொரு சர்வாதிகார ஆட்சி நடத்துகின்றனர். மாவட்ட நிர்வாக அதிகாரியாகிய இந்திய கலெக்டருக்கு சமமான அரச அதிபர் தொடக்கம் சகல அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் அரசிடமே சம்பளம் பெறுகின்றனர். சகல அபிவிருத்தித் திட்ட வேலைகள் மின்சாரம், நிவாரணப் பணிகள், அத்தனையும் அரச பணத்திலேயே நடைபெறுகிறது. கூருங்கக் கூறின் அவர்களுக்கு நிர்வாகச் செலவு ஒரு சதமும் இல்லாமலேயே தங்கள் பகுதிகளில் நிர்வாகம் நடத்துகின்றனர். பயங்கரவாதிகளின் தேவைகள் அத்தனையையும் கவனிக்கின்ற உலகிலேயே ஒரேயொரு அரசு இலங்கை அரசே. அவர்களின் மீது கொண்ட அனுதாபம் காரணமாக அல்ல மக்களின் தேவைகளை எங்கிருந்தாலும் நிறைவேற்றுவது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கப்படும் சகல பொருட்களிலும் முதல் உரிமை கோருவது புலிகளே.

கிளிநொச்சி மாவட்டத்தை 14 ஆண்டுகள் பிரதிநிதுத்துவப்படுத்தியதுடன் மேலும் 3 ஆண்டுகள் யாழ் தேர்தல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கையின் வடபகுதியை நன்றாகவும், கிழக்கு மாகாணத்தை கணிசமான அளவும் தெரிந்த ஒருவரிடமிருந்தே தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இச்செய்தி வருகின்றதேயன்றி ஓர் அந்நியனிடமிருந்தல்ல.

எனது இவ்வேண்டுகோள் இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான நிலைப்பாடு பற்றி தமிழ் நாட்டு மக்களுக்கும் தலைவர்களுக்கும் தெளிவுபடுத்தி அவர்களுடைய கண்ணைத் திறந்து அவர்கள் விடுதலைப்புலிகளுக்காகப் பேசுவதை விடுத்து தமிழ் மக்கள் சார்பில் செயற்படுவார்களென வலுவாக நம்புகின்றேன். இந்திய மத்திய அரசையும் தமிழ் நாட்டு மாநில அரசையும் பல்வேறு கட்சிகளை உள்ளடக்கிய சட்டசபை உறுப்பினர்களையும் கொண்ட ஓர் தூதுக்குழுவை அனுப்பி எமது நாட்டு உண்மைநிலையை கண்டறிய வேண்டும் என மிகவும் ஆர்வத்துடன் வேண்டுகின்றேன். அத்தகைய குழு விடுதலைப்புலிகளின் அதிகட்டுப்பாட்டுப் பிரதேசமான இரும்புத் திரையென விளங்கும் பகுதிக்கும் விஜயம் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு தலைவர்களுக்கும் மக்களுக்கும் இவ்வேண்டுகோளில் அடங்கிய அத்தனை விடயங்களும் எனக்கு தெரிந்தவகையில் முற்றிலும் உண்மையென உறுதியளிக்கின்றேன். முடி

வில்லா இந்த யுத்தத்தால் வடகிழக்கில் வாழும் தமிழர்களும் தமிழை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களும் வர்ணிக்க முடியாத அளவிற்கு கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்த காரணத்தினா

தொடர்ச்சி 7ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மதத்தலைவர்கள் நாட்டு மக்களுக்கும், கட்சிகளுக்கும் விடுத்திருக்கும் செய்தி



இனங்களிடையே அமைதி, சமாதானத்தை நிலைநாட்ட

ஒன்றிணைந்து செயற்படுங்கள்

இந்த நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாட்டு மக்களும், அனைத்து அரசியல் கட்சிகளும் பேதங்களை மறந்து, குறுகிய இலாபம் தேடுவதைக் கைவிட்டு ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டுமென பௌத்த மதத்தலைவர்கள் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அஸ்கிரிய பீடாதிபதி அதி வணக்கத்திற்குரிய உடுகம சிறி ரத்னபால மகாநாயக்க தேரர், மல்வத்த பீடாதிபதி அதி வண. திப்பட்டு வாவே சிறி சித்தார்த்த மகாநாயக்க தேரர், ரமான்ஞ பீடாதிபதி அதி வண. வேவல் தெனிய மேதாலங்கார மகாநாயக்க தேரர், அமரபுர பீடாதிபதி அதி வண. தவுல்தெனே ஞாநிசார மகாநாயக்க தேரர் ஆகியோர் அந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

இலங்கையின் சகல இனத்தவர்கள் மதத்தவர்கள் மத்தியிலும் சமாதானத்தையும் அமைதியையும் நிலைபெறச்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது இனப்பிரச்சினைக்கு வெற்றிகரமான தீர்வைக் காண வழிவகுப்பதுடன் நாட்டின் அபிவிருத்திக்கும், அரசாங்கத்தின் சிறந்த நிர்வாகத்திற்கும் அவசியமாகும்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இந்த வேளையில் குறுகிய அரசியல் இலாபம் தேடும் நோக்கில் நாட்டின் நலன்களுக்கு ஊறு விளைவிக்கப்படுவதை நியாயமாகச் சிந்திக்கும் இந் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் குறுகிய அரசியல் இலாபம் தேடுவதைக் கைவிட்டு நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், அனைத்து இன மக்களும் ஜனாதிபதிக்கும், அரசுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் தேவையான ஒத்துழைப்புகளை வழங்கி தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு கோருகின்றோம். இவ்வாறு மூன்று நிக்காயா க்களின் நான்கு மகாநாயக்கர்களும் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தலைவாக

6 ம் பக்கத் தொடர்ச்சி

லும் விடுதலைப் புலிகளால் தாம் வாழும் அடிப்படை உரிமைகளையும் இழந்துள்ளமையாலும் புலிகள் மீது வெறுப்புக் கொண்டுள்ளனர். விடுதலைப்புலிகளின் பைத்தியக்காரத்தனத்தால் 15 ஆண்டுகளுக்கு மேல் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். பல தலைமுறைகளாக வட இலங்கையில் தமிழ் மக்களுடன் சகோதரர்கள் போல் வாழ்ந்து வந்த இஸ்லாமிய சகோதரர்கள் தமது சொத்துக்கள் அத்தனையையும் விட்டு 500 ரூபாவுடன் மட்டும் வெளியேற்றப்பட்டனர். கடந்த 15 ஆண்டு காலமாக இன்றும் தென்னிலங்கையில் அகதிமுகாம்களில் பல துன்பங்களுடன் வாழ்கின்றார்கள். இவர்களால் நாம் எமது கிராமங்கள், எமது வீடுகள், எமது பாடசாலைகள், எமது சேமிப்புக்கள், ஆண்டாண்டு காலமாக எம்மால் சேமித்து வைக்கப்பட்ட பல்வேறு பொருட்கள், எமது தொழில்கள், எமது உற்றார் உறவினர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக மிகப்பெறுமதி மிக்க எமது கலாச்சாரம் நாகரீகம் அத்தனையும் இழந்து நிற்கின்றோம். விடுதலைப்புலிகளால் வேண்டுமென்றே சிங்கள மக்கள், பல்வேறு ஜனநாயக கோட்பாட்டுக்கு கட்டுப்பட்ட அரசியற் கட்சிகள் வேறு குழுக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள கசப்புணர்வை ஒரு புறத்தே வைத்துவிட்டு இனப்பிரச்சினை தீர்வுக்காக திறந்த மனத்துடன் செயல்படுமாறும் இனக்கலவரத்தை தூண்டிவிடும் நோக்கோடு அப்பாவிச் சிங்கள மக்களை படுகொலை செய்வதை நிறுத்துமாறும் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டுகின்றேன்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் 13 சிங்கள இராணுவத்தினர் படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து நாடே தீப்பற்றி எரிந்தது. ஆனால் கடந்த 2 ஆண்டு காலமாக இதனை விடவும் கூடுதலான எண்ணிக்கையில் இராணுவத்தினர் கிளைமோர் தாக்குதல்கள், கண்ணிவெடிதாக்குதல்கள், கைக்குண்டுத் தாக்குதல்கள் பேன்றவற்றில் தினமும் கொல்லப்பட்ட போதும் ஒரு வித பதில் தாக்குதல்களும் நடைபெறவில்லை. ஆண் பெண் குழந்தைகள் உட்பட 50க்கு மேற்பட்ட அப்பாவி சிங்கள பஸ் பயணிகள் படுகொலை செய்யப்பட்ட போதும் நாட்டில் அமைதியே நிலவியது. அதனை தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட கடற்படையினர் லீவில் சென்று திரும்புகையில் தற்கொலை குண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்ட போதும் அமைதியே நிலவியது இவ்வாரம் பஸ்ஸில் குண்டுவைத்த இரு சம்பவங்களில் 21 அப்பாவி மக்கள் பலியாகியதோடு 70க்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். அவ்வாறிருந்தும் பல்வேறு சமூகங்கள்

பயணிகள் பஸ் மீதான தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் இறுதி ஊர்வலம்

மத்தியில் அமைதியேபதிலவுகின்றது. இவை விடுதலைப்புலிகள் வகுப்புக் கலவரத்தை தூண்ட எடுக்கும் தந்திரோபாயங்களை பொருட்படுத்தாது இனப்பிர்ச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வுகாண மக்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர் என்பதையே காட்டுகின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட குண்டு வீச்சையும் அதில் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதையும் நியாயப்படுத்த முடியாது. விடுதலைப்புலிகள் யுத்தப்பிரதேசத்திலிருந்து மக்களை தப்பியோட விடாது தடுத்துவிட்டனர் என காரணம் கூறுவதை ஏற்கமுடியாது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ அன்றி அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ வாழும் ஒவ்வொருவரின் உயிரையும் பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமையாகும். ஆகவே விடுதலைப்புலிகள் தம்மை பாதுகாப்பதற்காக பொதுமக்களை மனிதக் கேடயமாக பாவிப்பதாக கூறும் காரணமும் ஏற்கக் கூடியதல்ல. முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும். விமானத்தாக்குதலால் ஒரு உயிர் தன்னும் இழக்கப்படக் கூடாது என்பதனை அரசு தமது படைகளுக்கு கண்டிப்புடன் கூறிவைக்க வேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு அனைவரும் ஏற்கக் கூடிய நியாயமான தீர்வை கொண்டுவருவதற்கு தமிழ்நாடு முன்னின்று செயற்பட்டு இலங்கையில் குறிப்பாக தமிழ் பிரதேசத்தில் ஜனநாயகமும், சமாதானமும் தழைக்க உதவுமென நம்புகின்றேன். இனப்பிரச்சினை தீர்வுக்கு எவராலும் பங்கம் ஏற்பட இடமளியாது மக்களினுடைய சர்வதேச சமூகத்தினுடைய உற்சாகம் மறைய முன்பு செயற்படும் என எதிர்பார்க்கின்றேன். தமிழ்நாட்டு முதலமைச்சர் அனுபவிக்கும் அதிகாரங்களை ஒத்த அதிகாரப்பகிர்வை இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களுக்கும் பெற்றுக் கொடுக்க தமிழ்நாடு தீவிரமாகச் செயற்படும் என நம்புவதோடு அதுவே அமைதியையும் மகிழ்ச்சியையும் மக்களுக்கு கொடுக்கும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்.

- ஒருவரின் வாக்குரிமை பறிக்கப்பட்டால்
- சுதந்திர நடமாட்டம் கட்டுப்படுத் தப்பட்டால்
- பேச்சுரிமை மறுக்கப்பட்டால்
- இஸ்டமான பத்திரிகை படிக்கும் உரிமை மறுக்கப்பட்டால்
- தனது இஸ்டப்படி தொலைபேசி பாவிக்கும் உரிமை மறுக்கப்பட்டால்
- இனத்தொயாதோரால் பிள்ளைகள் கடத்தப்பட்டால்
- போர் பயிற்சிக்கென பெற்றோர் வற்புறுத்தப்பட்டால்
- வயதிற் குறைந்த மகன் சிறுவர் படையணியில் சேர்க்கப்பட்டால்
- விடுதலைப்புலிகளில் சேர்ந்த மகள் வீடு திரும்ப மறுத்தால்
- பாடசாலை சென்ற மகன் உருவற்று சதைபிண்டமாக வீடு திரும்பினால்
- சந்தைக்கு சென்ற மனைவி அடையாளம் தெரியாது உருக்குலைந்து வீடு திரும்பினால்
- மகனோ மகளோ மூளைச்சலவை செய்யப்பட்டு மனிதக் குண்டாக மாற்றப்பட்டால்
- பாவம் அவரால் என்ன செய்ய முடியும் ?

தமிழர்களுக்கு இது தினமும் எங்கேயோ ஓரிடத்தில் நடக்கின்றது. இச்சம்பவங்கள் கால எல்லையின்றித் தொடர்வதை தமிழ்நாடு அனுமதிக்கப்போகின்றதா?

வீ. ஆனந்தசங்கரி, தலைவர் த.வி.கூ

தீர்வுக்கு அடிப்படை

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) ஆகிய கட்சிகள் 18.04.2007 அன்று விடுத்த கூட்டறிக்கை

எமது மக்களின் அவலநிலையையும், வன்முறைக் கலாச்சாரத்தால் ஏற்பட்டு வரும் அழிவுகளையும் கருத்திற்கெடுத்து, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எய்துவதை அடிப்படை இலக்காகக் கொண்டு முதற்படியாக தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) ஆகிய மூன்று கட்சிகளும் ஐக்கியப்பட்டுச் செயற்பட்டு வருகின்றோம்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண அவர்கள் அடிப்படையான சில ஆலோசனைகளை முன் வைத்துள்ளார். அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு.ஆனந்த சங்கரி அவர்கள் இந்திய அமைப்பு முறையில் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றார். தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன் சர்வகட்சிக் குழுவின் முன்னால் நேரில் சமூகமளித்து சமஸ்டி முறையிலான தீர்வினை வலியுறுத்தியுள்ளார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒரு விரிவான அரசியல் தீர்வுத் திட்டத்தை அனைத்துக் கட்சிக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது. மேற்படி யோசனைகள் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான, அதிகாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பான கலந்துரையாடல்களை, செயற்பாடுகளை மேலும் செழுமைப்படுத்திச் செல்ல ஒரு அடிப்படையாக அமையும். இவற்றினை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புக்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

எம்மைப் பொறுத்தவரை 60 ஆண்டுகளாக நீடித்து நிலவும் இப்பிரச்சனைக்கு தற்போதைய தருணத்தில் நிரந்தரத் தீர்வு காண்பதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தபட வேண்டும். மூன்று தசாப்த யுத்தம் மற்றும் வன்முறைகளால் உயிரிழப்புகள், சொத்து அழிவுகளால் மக்கள் மிகவும் களைப்படைந்து விட்டனர்.

அன்றாட அவலங்கள் தொடர்பான எமது அக்கறைகளுடன் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வொன்றை எட்டுவதற்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும். ஜனநாயகத்தையும், சமாதானத்தையும், அமைதியையும் நேசிக்கும் சாதாரண தமிழ் மக்களின் ஏக்கமும் இதுதான். சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நிரந்தரமாக, நிம்மதியாக சொந்த இடங்களில் வாழ்வதற்கான பிரதிபலிப்புக்கள் காணப்படுகின்றன.

சமஸ்டிமுறையிலான அதிகாரப் பகிர்ந்தளிப்பிற்கு ஏற்புடையதாக நாட்டின் அரசியலமைப்பில் தீவிரமான மாற்றங்கள் அவசியமானதாகும். "சமஸ்டி" என்ற பதம் அரசியல் யாப்பில் இடம்பெறாவிட்டாலும் அந்த உணர்வின் அடிப்படையில் இந்திய முறையிலான அதிகாரப் பகிர்ந்தளிப்பு மேற்கொள்ளப்படுவது சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாகும்.

சர்ச்சைக்குரியதாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண இணைப்பை பற்றி எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்புகின்றோம். ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வடகிழக்கில் வாழுகின்ற மக்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளமையால், இப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை இணைந்த வடகிழக்கு நிர்வாகத்தின் மூலமே காணமுடியும் என உறுதியாக நம்புகிறோம்.

யுத்தம் உருவெடுத்து மக்கள் இடம் பெயர்வதற்கு முன்னர் வாழ்ந்த பகுதிகளில் இன மத பேதமின்றி மீள் குடியமரவும் இம்முறை வழியேற்படுத்தும். இப்பகுதியில் வாழும் சமூகங்களின் பாதுகாப்பு வாழ்விடம் தொடர்பான அச்சங்களை கவனத்திலெடுத்து ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள் ளோம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் எண்ணிக்கையில் சிறுபான்மையான தேசிய சமூகங்கள் அந்தந்த பிரதேசங்களில் அவர்களுடைய அபிலாஷைகள், உரிமைகள், மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் அரசியல் அமைப்பில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். நாட்டின் எப்பகுதியிலும் இலங்கையின் சகல இன மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கான உத்தரவாதம் உறுதி செய்யப்பட வேண்டும்.

இலங்கை பல்லின, பல்மத, பல்மொழி மற்றும் பல் கலாச்சாரங்களைக் கொண்ட நாடாகவும், இலங்கையின் இறையாண்மைக்குள் ஆட்சி அதிகார அங்கங்களான மத்திய, மாநில அரசியல் நிர்வாக கட்மைப்புக்களில் இனசமூகங்களின் விகிதாசாரம் கருத்திற்கெடுக்கப்பட்டு பிரதிநிதித்துவங்களோ, நியமனங்களோ மேற்கொள்ளப்பட வேண்டும். தேர்தல் சீர்திருத்த ஏற்பாடுகளிலும் இந்த விடயம் பிரதிபலிக்க வேண்டும்.

அதிகாரப் பகிர்ந்தளிப்புச் செயன்முறையினூடாகவே நாம் ஐக்கிய இலங்கையை சுபிட்சமான எதிர்காலத்தை நோக்கி கட்டியெழுப்ப முடியும்.

எமது இந்த நிலைப்பாட்டுடன் இணைந்து செயற்பட விரும்பும் அனைத்து அரசியல் சமூக சத்திகளுடனும் நாம் ஐக்கியமாகச் செயற்படத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிவு வர வழி சமைப்பாய

கத்தியின்றி இரத்தமின்றி சத்தியத்தால் உரிமையை
யுத்தி கொண்டு பெறுவதற்கும் பாடுபடும் சங்கரியே
பக்தியுள்ள தமிழர் எல்லாம் உன்னை ஏற்றுக் கொள்ளவே
சக்தியோடு வாழ வேண்டும் நூறு ஆண்டுகாலமே

அன்று தொட்டு இன்றுவரை தமிழர்க்காக வாழ்கிறாய்
என்று உந்தன் எண்ணம் யாவும் வெற்றிக்கொடி நாட்டுமோ
கன்று ஈன்ற பசுவை போல பாசமாக பார்க்கிறாய்
வென்று வந்து அளித்திடுவாய் சமஷ்டி ஒன்றை இலங்கையில்

தமிழன் இன்று உலக ஏட்டில் தெரிந்தவனாய் வாழ்ந்திட
சகிப்புத்தன்மையே வீரம் என்று உலகறிய -காட்டினாய்

குடுவியல்ல அஹிம்சையென்று காந்தியன்று சொன்னதை
ஈழத்தமிழனாலும் முடியுமென்று உலகிற்கு காட்டினாய்.

உலகம் இன்று உந்தன் செயலை பெருமையாக ஏற்றதால்
பலம் பெற்று வாழ்க வென்று விடுது உன்னை சேர்ந்ததே
கலகம் இல்லாத் தமிழர் குலம் வாழ வேண்டும் என்பதை
இலகுவாக பெற்றெடுக்கும் உன் முயற்சிகள் வாழ்கவே

பொறுப்பு மிக்க மனிதனாக அரசியலில் வாழ்கிறாய்
உறுப்பு உள்ள சுதந்திரத்தை பெறுவதற்கு உழைக்கிறாய்
சிறப்பாக அதை நடத்த அரசியல் ஞானம் வேண்டும்
வெறுப்பு அற்று சமஷ்டி ஆட்சி எற்க வேண்டும் என்கிறாய்

முடிந்தவரை முயற்சி செய்து மிஞ்சியுள்ள தமிழர்க்கு
கடிந்துரைத்தாய் மக்கள் ஆட்சி பயனென்றோ
இடிந்து போன மனதோடு வாடும் ஈழத் தமிழருக்கு
விடிவு வர வழி சமைப்பாய் வீரத் தமிழ் ஆனந்தனே!

ஆக்கம்: கனக சோமசுந்தரம்

ஜனாதிபதியுடன் சந்திப்பு

சமஸ்டிக்கு குறைந்த எந்த யோசனைகளும் தீர்வாக அமையாது

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) ஆகிய கட்சிகளின் கூட்டமைப்பு பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சமர்ப்பித்துள்ள தீர்வு யோசனைகள் குறித்தும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள் குறித்தும் சந்தித்து கலந்துரையாடினர்.

கடந்த 04.05.2007 அன்று இடம்பெற்ற இச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தாத்தன், ஈபிஆர்.எல்.எவ் (பத்மநாபா) கட்சியின் யாழ் பிராந்திய செயலாளர் சிவராஜா மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர். மேற்படி கட்சிகள் தமிழரின் இனப்பிரச்சினைக்கு இணைந்த வட-கிழக்கில் சமஷ்டி முறைமையிலான தீர்வு அவசியம் என தமிழர் தரப்பு நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

மாவட்டசபைகளை அதிகாரப்பரவலாக்கல் அலகாகக் கொண்ட தீர்வு யோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் இவை எந்த விதத்திலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை அண்மிக்கவில்லையென்றும் மூன்று கட்சிகளினதும் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினார். சமஷ்டிக்கு குறைவான எந்த யோசனைகளும் தீர்வாக அமையாது என இந்த மூன்று கட்சிகளினதும் நிலைப்பாடு ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இவை முன்யோசனைகள் மாத்திரமேயன்றி இறுதி தீர்வல்ல என்பதால் நீங்கள் இது குறித்து கவலைகொள்ளத் தேவையில்லையென தெரிவித்ததுடன். இந்த யோசனைகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தனி யோசனைகளே தவிர அரசாங்கத்தின் தீர்வு திட்ட யோசனைகள் அல்ல என்பதினை தெளிவுப்படுத்தினார். நீங்கள் உங்கள் யோசனைகளையும், திருத்தங்களையும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவில் முன்வைக்கலாமென தெரிவித்த ஜனாதிபதி அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவினால் இறுதிசெய்யப்படும் தீர்வுத்திட்டம் எதுவாக இருந்தாலும் அதனை நான் ஏற்றுக்கொள்வேன் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்கத் தரப்பில் அரசாங்கப் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா, பேராசிரியர் விஸ்வவர்ண பால, வெளியுறவுத்துறை அமைச்சர் ரோகிதபோகல்லாகம ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ராஜிவ் காந்தி நினைவு தினம்

இலங்கை தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணும் முயற்சியில் இந்தியா தீவிர அக்கறை காட்ட காரணமாக இருந்தவர் அன்றைய பாரதப் பிரதமர் ராஜிவ் காந்தி. இந்தியா - இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவின் பரிபூரணமான ஒத்துழைப்பை நல்கியவர். அன்று இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே ஆர் ஜெயவர்த்தனாவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக கொழும்பு வந்த ராஜிவ்



காந்தி இலங்கை கடற்படை வீரர் ஒருவரால் தாக்கப்பட்டார். எத்தகைய சூழலில் இலங்கை தமிழர்களுக்கு உதவ இந்தியா முன்வந்தது என்பதை இது தெளிவாக காட்டியபோதும் தமிழர் தரப்பு தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கிடைத்த அரிய வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டது. எதிரியையும் நண்பனையும் பகுத்தறியும் பக்குவமில்லாத புலிகள் தற்கொலை குண்டு தாரியை ஏவிவிட்டு அவரை கொன்று இலங்கை தமிழர்களை நட்டாற்றில் தள்ளியது. ஆயினும் நன்றியுள்ள தமிழ் மக்கள் இந்தியாவின் பங்களிப்பையும் அதற்கு காரணமான அமரர் ராஜீவ் காந்தியையும் மறந்துவிடமாட்டார்கள்.

உதயமாகும்உதயசூரியன

சென்ற இதழ் தொடர்ச்சி

பாபுஜி

தந்தை செல்வாவடைய பிறந்த தினத்தை முன்னிட்டு நிகழ்ந்த ஒரு தொலைக்காட்சி உரையாடலில் தமிழரசக் கட்சியின் முன்னாள் செனட்டரும் இன்றைய முஸ்லீம் காங்கிரசின் முக்கிய உறுப்பினருமான கலாநிதி மசூர் மௌலானா அவர்கள் தந்தை செல்வா அடிக்கடி குறிப்பிடும் ஒரு கருத்தை தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இன்னொருவரது வீழ்ச்சியின் மூலம் எனக்கு வெற்றி வாய்ப்பு கிடைக்க வேண்டுமாயிருந்தால் அப்படிப்பட்ட வாழ்வும் வெற்றியும் எனக்குத் தேவையில்லை என்று. இன்று இதை எல்லோரும் சற்று நிதானமாக ஆராய வேண்டும். ஆனால் ஆராய்வதற்கு நேரம் உண்டா? இன்று இந்த ஒரு மாத காலத்திற்குள் எத்தனை விடயங்கள் நடைபெற்று விட்டன.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சனைக்கு அரசின் முக்கிய பங்காளிக் கட்சியான சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள மாவட்ட அபிவிருத்திச் சபை ஏற்கனவே ஐக்கிய தேசிய கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு திட்டம். இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடந்த தேர்தலின் போது ஏற்பட்ட வன்செயல்களை நாம் மறந்து விட முடியாது. கடந்த 26 வருடங்களுக்குப் பிறகும் தமிழர்களுடைய பிரச்சனை பற்றிய எந்தவொரு அறிவும் இல்லாதது போல் இருப்பதும் அத்துடன் அதற்கு தீர்வு காண காலம் கடத்துவதும் ஒவ்வொரு தடவையும் ஆட்சிபீடமேறும் அரசுகளின் தந்திரோபாயமும் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

தம்மை ஏகபிரதிநிதிகளென தமக்குத் தாமே மகுடம் சூட்டிய விடுதலைப் புலிகளின் இன்றைய பிரிவு நிலை தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்ற பட்டணத்துச் சித்தரின் வாக்குக்கொப்ப பலித்து விட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு செய்த துரோகம் இன்று அவர்களிடத்தில் அதிகப் படியாக ஆதிக்கம் செலுத்தி பிரித்து வைத்து கொடூரமான கொலைகளுக்கு காரணமாக அமைகிறது. புலிகள் பிளவுபட்டதால் ஆளும் அரச தரப்பினருக்கு வட-கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தின் மூலம் பிரித்துவிட்ட மகிழ்ச்சி ஒருபுறம். தமிழர்களே தங்களுக்குள் அடிபட்டு மோதிச் சாவதும் அவர்களில் சிலருக்கு மகிழ்ச்சிதரக்கூடிய விடயமே.

வான்படைத் தாக்குதல் நடாத்தி வெற்றிக்களிப்பில் இருக்கும் ஏகபிரதிநிதிகள் அப்பாவித் தமிழ் மக்கள் மீது அரசு மேற்கொள்ளும் சகல தாக்குதல்களையும் தடுத்து நிறுத்த முன்வர வெண்டும். கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம், பலாலி விமானத்தளம் மற்றும் இராணுவ முகாம், கொழும்பு எரிபொருள் சேமிப்பு நிலையங்கள் மீதான புலிகளின் வான் தாக்குதல்கள் எவற்றையுமே எந்தவொரு நாடும் கண்டிக்காத நிலையை புலிகள் தமக்கு சாதகமாக எண்ணுவது மாபெரும் தவறாகும்.

இன்று மக்கள் யுத்த தந்திரம் என்று விடுதலைப் புலிகள் கூறிவரும் ஏமாற்றுக் கருத்துக்களை ஏற்க முன்னரைப் போல ஏமாளிகள் அல்லர். எல்லா வழிகளிலும் துன்பத்தை அனுபவித்து இனி மேலும் இயலாது என்ற நிலையில் எதுவுமே வேண்டாம் என்று இவர்கள் தமது வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் அகதி முகாம்களில் படும் அல்லல்கள் சொல்லிலடங்காது. அது மட்டுமல்ல இயற்கையும் இம் மக்களை வாட்டி வதைக்கிறது. மாணவர்களின் கல்வி அதைவிட மிக மோசமானதாக இருக்கிறது.

பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்பது போல எமக்கு உரிமைப் போராட்டமும் வேண்டாம் நீங்களும் வேண்டாம் எமது சொந்த இடங்களில் நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என்று ஒவ்வொருவரும் உளத்துக்குள்ளே அழும் குரல் எமக்கு கேட்கிறது.

போராடப் புறப்பட்ட ஒவ்வொருவரும் சற்றே திரும்பி கடந்து வந்த பாதையை ஒருபுறம் நினைத்துப் பாருங்கள்.

அடுத்த இதழில் தொடரும்...

நோர்வே தூதுவருடன் சந்திப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி (த.வி.கூ) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) ஆகிய மூன்று தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் தலைமையில் நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட் ஸ்கரை அவரது கொழும்பு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

நோர்வே தூதுவரின் அழைப்பின் பேரில் கடந்த 11.05.2007 அன்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் யாழ் பிராந்தியச் செயலாளர் சிவராஜா மோகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ் மக்களின் அபிலாசைகளை கவனத்திலெடுத்து இந்திய முறையிலான அதிகாரப்பகிர்வை மேற்கொள்வது அவசியம் என நோர்வே தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டது.

யுத்தநிறுத்தத்தின் பின்னர் நாடு முழுவதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் இடம் பெறும் படுகொலைகள், ஆட்கடத் தல்கள் தொடர்பாகவும் கிழக்கு மாகாண நிலமைகள் அங்கு இடம்பெயர்ந்த மக்கள் எதிர் கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்தும் நோர்வே தூதுவரிடம் எடுத்துக் கூறப் பட்டது. வடக்கு கிழக்கில் புலிகளின் பிடிக்குள் சிக்குண்டிருக்கும் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

இம்முறை
உதயசூரியன்
ஏப்பிரல் – மே
மாதங்களுக்கான
இதழாக வெளிவருகின்றது
கால தாமத்திற்கு மனம்வருந்துகிறோம்

எமது கட்சிக்காகவும் தமிழ் இனத்தின் விடிவிற்காகவும் உயிர்நீத்த எமது கட்சி தொண்டர்கள், தலைவர்கள் பற்றிய விபரங்கள், முக்கிய கட்டுரைகள் என்பனவற்றை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் அவற்றை பொருத்தமான நேரத்தில் எமது உதயசூரியன் பத்திரிகையில் பிரசுரிப்போம் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு

உதயசூரியன் பணிமனை
30/1பி அல்விஸ் பிளேஸ்
கொழும்பு –03

வருடச்சந்தா 150.00 ரூபா

உதய சூரியன் பத்திரிகையை பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்

இல: 38 சீ மக்கன்சி வீதி, கெப்பிற்றிப்பொல மாவத்தை, கொழும்பு - 5.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சுலலித்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30/1B, அல்விஸ் பிளேஸ், கொழும்பு 03 இல் உள்ள த.வி.கூட்டணியினரால் வெளியிடப்பட்டுள்ளது.